தோழர் சீனிவாசராவ்

வாழ்க்கை வரலாறு

NCBH

ஆர். நல்லகண்ணு

பெரியார்-நினைவகம் நூலகம்
சே.எண் 755
அம்பத்தூர், சென்னை-98

தோழர் சீனிவாசராவ் வாழ்க்கை வரலாறு

(அமரர் சீனிவாசராவ் வாழ்வும் பணியும்)

ஆர். நல்லகண்ணு

NCBH

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை-600 098.

THOZHAR SRINIVASA RAO
Vazhkkai Varalaru

by

R. Nallakannu

முதல் பதிப்பு : டிசம்பர், 1975.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொன்விழா வெளியீடு

இரண்டாம் அச்சு : மார்ச், 2002.

© உரிமைப் பதிவு

Code No : A 1154

பெரியார்-நூலகம்மை நூலகம் ★ அம்பத்தூர், சென்னை-98 ★ சே.எண். 755

விலை : ரூ. 20.00

ஒளிஅச்சு: NCBH கம்ப்யூட்டர்ஸ்

அச்சிட்டோர்:

அச்சிட்டோர் : பால சொர்ணம் ஆர்ட்

சென்னை - 14. போன் : 8585626

முதல் பதிப்பின் முன்னுரை
(1975)

அமரர் சீனிவாசராவ் அவர்களின் பதினைந்தாவது நினைவாண்டு முடிந்துவிட்டது.

நாட்டின் விடுதலைக்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணம் செய்தவர். விடுதலை பெற்ற சுதந்திர இந்தியாவிலும் அவர் சுகமாக வாழவில்லை.

அந்நியத் துணிக்கடை மறியலில் எந்தக் கடை முன் மறியல் செய்து கைதானாரோ, அதே கடையில் 1947 ஆகஸ்டு சுதந்திரத்தினத்தன்று கோலாகலமாக மின்விளக்குகளால் அலங்கரித்து விளம்பரம் செய்யப்பட்டிருந்ததாம். இதைக் கண்டு வேதனைப்பட்டதாக 'தலை மறைவு வாழ்க்கை' என்ற நூலில் எழுதியிருக்கிறார்.

சுதந்திரம் கிடைத்த பிறகு, அதிகார அந்தஸ்துள்ள அரசு நிர்வாகப் பொறுப்புகளையோ, சட்டமன்ற, பாராளுமன்றப் பதவிகளையோ அடைந்தவரில்லை. இருப்பினும் அவர் தமிழ் நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்கள், உழைக்கும் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களின் உள்ளத்தில் நிலையான இடத்தைப் பெற்றிருக்கிறார்.

"அமரர் சீனிவாசராவ் செய்த சேவையின் மதிப்பு எல்லோராலும் உணரப்படக்கூடிய காலம் வரும்" என்று ஜீவா அவர்கள் அறுதியிட்டுக் கணித்திருக்கிறார்.

சிங்காரவேலர், ஜீவா, சீனிவாசராவ், பாலதண்டாயுதம் போன்ற தலைவர்களின் வாழ்க்கையும், இன்னும் பல முதிய தோழர்களின் வாழ்க்கையும் தமிழ் நாட்டில் சோஷலிசக் கருத்துள்ள முற்போக்கு இயக்கத்தின் வரலாற்றோடு

இணைந்ததாகும். இவர்களின் வரலாறுகளும், சம்பவங்களும் எடுத்துக்கூறப்படுவது அவசியமாகும். இளம் சந்ததியினருக்கு வரலாற்று அனுபவமாக இருக்கும்.

அமரர் சீனிவாசராவின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாக எழுத வேண்டுமென்பது எனது நீண்ட நாள் ஆசை. வேலைகளின் காரணமாக முடியாமலிருந்தது. அவ்வப்போது தோழர் நல்லமுத்து தூண்டி வந்தார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொன் விழாவை யொட்டியாவது எழுதி முடிப்பதென்று தீர்மானித்தேன்.

தோழர் சீனிவாசராவ் வரலாற்றை எழுதுவது அவ்வளவு இலகுவாக முடியவில்லை. எழுத்தறிவில்லாத பின்தங்கிய மக்களிடம் அவர் பணியாற்றினார். தனது வாழ்க்கையைப் பற்றி யாரிடமும் விரிவாகச் சொல்லவுமில்லை; எழுதி வைக்கவுமில்லை. "தலை மறைவு வாழ்க்கை" என்ற நூலில் மட்டும் ஒரு சிறு பகுதி இருக்கிறது. அதிலிருந்து துவங்க வேண்டியிருந்தது.

தோழர்கள் ஏ.எஸ்.கே, ப. மாணிக்கம், கே. முருகேசன் ஆகியோர் சீனிவாசராவ் நினைவு நாளில் எழுதியுள்ள கட்டுரைகளும் இந்நூல் எழுதப் பயன்பட்டன.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநிலத்தில் நிறுவிய மூலவர்களுள் ஒருவரான தோழர் சிஎஸ் (சி. சுப்பிரமணியம்) அவர்கள் சில விவரங்களைக் கூறினார்கள். பி.எஸ்.ஆரின் வாழ்க்கைத் துணைவி திருமதி நாச்சியாரம்மாள், சென்னைத் தோழர் அங்குசாமி, மாணவப் பருவத்திலேயே தஞ்சை மாவட்ட விவசாயிகள் இயக்கப் பணியில் ஈடுபட்டவரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சை மாவட்டச் செயலாளராக இருப்பவருமான

தோழர் எம். மாசிலாமணி, மற்றும் தோழர் காத்தமுத்து எம். பி. தோழர். கே. முருகேசன் ஆகியோர்களிடம் பல விவரங்கள் கிடைத்தன. பழைய ஜனசக்தி பத்திரிகைகளையும் புரட்டிப் பார்த்தேன்.

பின்னர்தான், சீனிவாசராவ் வாழ்க்கை வரலாற்றை எழுதத் துணிந்தேன்.

இதில் இன்னும் விடுபட்ட எத்தனையோ விவரங்களும் சம்பவங்களும் உண்டு.

சோஷலிச லட்சியத்துக்காகப் பாடுபட்ட சீனிவாசராவுக்கு— 1955ல் தான் சோஷலிச நாடுகளைச் சுற்றிப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. ஆறு வாரங்கள் சோவியத் யூனியனிலும், இரு வாரங்கள் செக்கோஸ்லோவேக்கியா, ஹங்கேரியிலும், அகில இந்திய விவசாயிகள் சங்கத் தூதுக்குழுவில் சென்று சுற்றுப்பயணம் செய்தார்.

தமிழ் நாட்டில் கட்டப்பட்டுள்ள சாத்தனூர் அணை இன்னும் பல்வேறு நீர்த்தேக்கங்கள் பற்றி, அவருடைய முயற்சியில் விவசாயிகள் சங்க மாநாடுகளில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மக்களைப் பாதிக்கும் எத்தனையோ பிரச்சினைகள் பற்றித் துருவித் துருவிக் கேட்டும், ஆராய்ந்தும் பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

சாதிக் கொடுமைகளை எதிர்த்தும், நில உரிமைக்காகவும், ஜமீன், இனாம் ஒழிப்புக்காகவும் இவைபோன்ற நிலப் பிரச்சினைகளை விளக்கிச் சிறு நூல்களை வெளியிட்டிருக்கிறார்.

சீனிவாசராவ் வரலாறு தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் வளர்ச்சியோடு இணைந்ததாகும். இந்நூலில்

விடுபட்டுள்ள சம்பவங்களை எடுத்து எழுதுமாறு நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அமரர் சீனிவாசராவ் அவர்களை, நெருங்கிப் பழகிய தோழர்களும், விவசாயிகள் இயக்க ஊழியர்களும் தஞ்சை மாவட்ட விவசாயிகளும் "காம்ரேட் .பி.எஸ்.ஆர்." என்று அன்போடு அழைப்பார்கள். இந் நூலில் பல இடங்களில் "பி.எஸ்.ஆர்" என்றே குறிப்பிட்டிருக்கிறேன்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொன்விழாவில் இந்நூலை வெளியிடுவதில் "நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்" தோழர்கள் ஆர்வத்தோடு ஒத்துழைக்கிறார்கள்.

தோழர். பி.இ. பாலகிருஷ்ணன் அவர்கள் சரிபார்த்து காலத்தில் வெளியிட உதவியுள்ளார்.

அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமரர் பி.எஸ்.ஆரின் வாழ்க்கை நெருப்பாற்றில் எதிர் நீச்சலடித்த வரலாறாகும்.

இச் சிறு நூல், விவசாயிகள் இயக்கத்தைக் கட்டுவதில் மேலும் ஆர்வத்தைக் கொடுக்குமானால்-அதுவே அமரர் பி.எஸ்.ஆர். அவர்களுக்குச் செய்யும் உரிய அஞ்சலியாக இருக்குமென்று கருதுகிறேன்.

சென்னை **ஆர்.நல்லகண்ணு**

8-12-75.

இரண்டாவது பதிப்பு

முன்னுரை

அமரர் **பி.சீனிவாசராவ்** அவர்களின் வாழ்க்கை, சமுதாய மாற்றத்துக்காகப் பாடுபடும்.போராளிகளுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது.

கடந்த நூற்றாண்டில் "அந்நியத் துணி பகிஷ்காரம்" எனும் இயக்கம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடத்திய போராட்டங்களின் அடிநாதமாக இருந்தது சென்னையில் நடந்த "அந்நியத் துணி பகிஷ்காரத்தில் சீனிவாசராவ் முழுமையாக ஈடுபட்டார்: அதனால் கொடிய அடக்குமுறைக்குள்ளானார். விடுதலை இயக்கத்தில் பலமுறை சிறை சென்றவர்.

அறிவு தெரிந்த நாள் முதல் நாட்டின் விடுதலையே தனது உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்த சீனிவாசராவுக்கு 1947 ஆகஸ்டு 15 அன்று கூடச் சுதந்திரம் கிடைக்கவில்லை: இடைக்கால அரசின் "பிடிவாரண்டு" இருந்தது: ஆகையால் தலைமறைவாக இருந்தார்: 'ஆனந்த சுதந்திரத்தை' வானொலியிலும், ஒலிபெருக்கிகளின் மூலமாகவும் கேட்டார். சுதந்திர விழாவில் பங்கேற்க முடியவில்லை: இந்த ஆதங்கத்தைத் தோழர் சர்மா அவர்களுக்கு எழுதிய கடிதங்களில் குறிப்பிட்டிருக்கிறார். இக்கடிதங்களே "தலைமறைவு வாழ்க்கை" எனும் நூலாக வெளியிடப்பட்டது. சீனிவாசராவ் ஆங்கிலக் கடிதங்களைச் தோழர் ஆளவந்தார் தமிழ்ப்படுத்தினார். இந்நூலில் மட்டுமே அவருடைய வாழ்க்கைக் குறிப்பு உள்ளது.

'இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொன்விழா" ஆண்டில், பி.எஸ்.ஆர் வாழ்க்கை வரலாறு நூலை எழுதினேன். எந்த மக்களின் விடுதலைக்காகப் போராடினாரோ, அந்த அடித்தட்டு மக்களை எட்ட வேண்டுமென்ற குறிக்கோளோடு, சிறு சிறு சொற்றொடர்களாக அமைத்தேன். படிக்கக் கூடிய முறையில் எழுத்து தெளிவாக இருக்க வேண்டுமென்றும் குறைந்த விலையிலும் இருக்க வேண்டுமென்றும் என்.சி.பி.எச் நிறுவனத்தாரிடம் தெரிவித்தேன். அவர்களும் அப்படியே வெளியிட்டார்கள். ஆனால் அந்த நோக்கம் சரியாக நிறைவேறவில்லை. விவசாயிகள் இயக்க வரலாறுகளைப் பற்றி எழுதும் தோழர்களுக்குச் சிறு ஆதாரமாகப் பயன்படுகிறது என்ற ஆறுதல் மட்டுமே உள்ளது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பவள விழாவும் முடிந்தது: இருபத்தொன்றாவது நூற்றாண்டின் துவக்க ஆண்டில் இரண்டாவது பதிப்பாக வெளியிட முன் வந்திருக்கும் என்.சி.பி.எச். நிறுவனத்துக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1963ல் நில உச்சவரம்பு மசோதாவின் போலித்தனத்தை எதிர்த்தும் உண்மையான உச்சவரம்பு கொண்டுவர வேண்டுமென்றும் பிரச்சார நடைப்பயணக்குழுக்களில் கலந்து கொண்ட தோழர்களின் பட்டியல் இப்பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது: மேலும் சில நிகழ்வுகள் இணைக்கப்பட்டுள்ளன.

சென்னை

ஆர். நல்லகண்ணு

26-1-2002

உள்ளுறை

1. என்னைப் போல் ஒருவர்-இவர் யார்? 1
2. பி.எஸ்.ஆரு ஒரு காவிரி ஆறு 3
3. நதிமூலமும் ரிஷிமூலமும் 6
4. விளையும் பயிர் முளையிலே 8
5. விடுதலை வேட்கை 11
6. சிங்கப்பூரில் சில வருடங்கள் 16
7. அந்நியத் துணிக்கடை மறியல் 18
8. ஜார்ஜ் மன்னருக்கு வெள்ளிவிழா 26
9. நேத்தாஜியும் சீனிவாசராவும் 29
10. கம்யூனிஸ்டான கதை 32
11. ஜனசக்தி உதயம் 40
12. "ஜனசக்தி"யில் ஒரு செய்தி 43
13. தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தோற்றம் 45
14. கொத்தடிமைக் கோட்டைக்குள் செங்கொடி 51
15. மன்னார்குடியில் முதல் மாநாடு 54
16. ஊழியர்களை உருவாக்கினார் 58
17. அடியாட்களை எதிர்த்து 61
18. சூடான பதிலடி 66
19. கலைத்தொண்டு 70
20. காதல் திருமணம் 74
21. பாத யாத்திரை 76
22. நில உச்சவரம்பு-மறியல் கிளர்ச்சி 80

அமரர் பி. சீனிவாசராவ்

1

என்னைப் போல் ஒருவர் — இவர் யார்?

1936 —

இந்திய நாடெங்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பு உச்சநிலை அடைந்திருந்தது. காங்கிரசின் செல்வாக்கு அமோகமாகப் பெருகியது.

நகரங்களில் மட்டுமல்ல; பட்டி தொட்டியெங்கும் காங்கிரஸ் பிரச்சாரம் வேகமாக நடைபெற்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசு தடை விதித்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பாளர்களெல்லாம் காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியின் பெயரில் வேலை செய்து வந்தார்கள். அந்நிய ஆட்சியை எதிர்த்துத் தீவிரமாகச் செயலாற்றி வந்தனர்.

இந்தியத் தேசியக் காங்கிரஸ் தலைவராகயிருந்த நேருஜி நாடு முழுவதும் சூறாவளிச் சுற்றுப்பயணம் செய்தார். நேருஜியின் மனைவி கமலா நேருவும், மகள் இந்திராவும் சேர்ந்து வந்தனர்.

நேருஜி சென்னைக்கு வந்தார்.

அன்று மாலை! “சிறு விருந்து நடத்துகிறோம் கலந்து கொள்ள வேண்டுகிறோம்” என்று தோழர் பி.எஸ்.ஆர். நேருவை அழைத்தார்.

முதலில் வருவதாக ஒப்புதல் அளித்தார். "பிற்பகலில் வேறு நிகழ்ச்சிகளிருப்பதால் விருந்துக்கு வர வசதிப்படாது" என்று நேரு தெரிவித்தவுடன் பி.எஸ்.ஆருக்கு கோபம் பிளிறியது.

"எங்களைப்போல் தொழிலாளர் தொண்டர்கள் நடத்தும் விருந்துக்கு வர நேரம் இருக்குமா?" என்று விசனித்தார்.

இளைஞனின் இயற்கையான உணர்வைப் புரிந்து கொண்டார் நேருஜி.

"என்னைப்போல் கோபக்காரனாக இருக்கும் இந்த இளைஞன் யார்?" என்று திரு. சத்திய மூர்த்தியிடம் கேட்டார்.

திரு. சத்தியமூர்த்தி, தோழர் பி.எஸ்.ஆர் பற்றிய விவரங்களைத் தெரிவித்ததும், நேருஜி விருந்துக்கு வர இசைந்தார்.

"விருந்தில் கொடுத்த காபி மிகவும் நன்றாக இருக்கிறதே! இன்னும் கிடைக்குமா? இதுபோல் காபி வேறு எங்கும் கிடைத்ததில்லை" என்று பாராட்டினாராம் நேருஜி.

கோபமுள்ள இடத்தில்தான் குணம் இருக்கும் என்பதை நேரு உணர்ந்தார் போலும்.

தோழர் பி.எஸ்.ஆரின் கோபத்தில் பொதிந்து கிடந்த உள்ளக் கிடக்கையைக் "கோபக்காரர்" என்று குணப்பெயர் வாங்'கிய நேருஜியால் சிறப்பாகப் புரிய முடிந்தது.

குறை கண்டு கோபம் கொள்ளும் இயற்கையான குணத்தைத் தோழர் பி.எஸ்.ஆர். – தனது ஐம்பத்து மூன்று ஆண்டு வாழ்வில் – இறுதிவரை கைவிடவில்லை.

2

பி எஸ் ஆரு ஒரு காவிரி ஆறு

"கன்னடம் பிறந்து தமிழகம் பாயும்
காவிரி ஆறு—அந்த
காவிரி ஆறைப்போல சிறந்தவர்
சீனிவாசராவு—தோழர் சீனிவாசராவு"

என்று கவிஞர் பரிணாமன் பாடியிருக்கிறார்.

காவிரியாறு கன்னடத்தில் உற்பத்தியாகிறது. மலையும் காடுகளும் கடந்து 'காவிரிப் பள்ளத்தாக்கு' என்று புவியியலில் கூறப்படும் சமவெளியில் பாய்ந்து, வங்கக்கடலில் சங்கமமாகிறது.

ஆடி மாதத்தில் "பதினெட்டாம் பெருக்கு" காவிரிக்கரை மக்களின் குதூகலமான நாள்.

"சோழவள நாடு சோறுடைத்து!"
"தமிழகத்தின் நெற்களஞ்சியமாம்
தஞ்சைத் தரணி."
"பங்கப் பழனத்து உழும் உழவன். . .
பலாவின் கனியைப் பறித்ததென்று
சங்கு கொண்டெறியும் புனநாடா"

என்ற பாடலும் சோழ நாட்டின் சிறப்பைக் கூறுகின்றது.

வயல் ஓரத்திலுள்ள பலாமரத்தில் குரங்கு பலாக் கனியைப் பறிக்கிறது. ஏர்பிடித்து உழுது கொண்டிருக்கும் உழவன், குரங்கை விரட்ட விரும்புகிறான், கீழே குனிந்து பார்க்கிறான், கல் கிடைக்கவில்லை, வெண் சங்குதான் கிடைக்கிறது, வெண் சங்கு கொண்டு எறிகிறான். அவ்வளவு செழிப்பு.

சோழ நாட்டைச் செழிப்பாக்கி – அதற்கென ஒரு நாகரிகத்தையும் உருவாக்கிப் பெருமையடையச் செய்தது – கன்னடத்தில் உதயமாகும் காவிரியாறு.

காவிரியாற்றுக்குத் தோழர் பி.எஸ்.ஆரை கவிஞர் ஒப்பிட்டுக் கூறியிருப்பது மிகவும் பொருத்தமானதாகும்!

சோழநாடு செழிப்பானதாக இருந்தாலும், வாழும் மக்கள் – உழைக்கும் உழவர் குடிப்பிறந்தோர், நிலப் பிரபுத்துவச் சுரண்டலாலும், பண்ணையடிமை, ஆண்டான் --அடிமை முறைகளாலும் அல்லலுற்று வந்தனர். மாடு தின்னும் பறையா-உனக்கு மார்கழித் திருநாளா? என்ற இழிச்சொல்லும், "சவுக்கை அடியும் சாணிப்பாலும்", கொடுக்கப்பட்ட கொடுமையும் "சுகந்தை" என்ற பரம்பரைக் கடன்முறையும் விவசாயத் தொழிலாளர்களையும், தாழ்த்தப்பட்ட மக்களையும் அழுத்திக் கொடுமை செய்த காலம்.

ஊமையராய்ச் செவிடர்களாய், உணர்வு மங்கிக் கிடந்த சோழ நாட்டு உழவர் பெருங்குடி மக்களைத் தட்டியெழுப்பி –"எல்லோரும் இந்நாட்டு மன்னர்! உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம். வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம். விழலுக்கு நீர்ப்பாய்ச்சி மாய

மாட்டோம் - வெறும் வீணருக்கு உழைத்து உடலம் சாய மாட்டோம்” என்று எழுச்சியுறச் செய்த பெருமை கன்னடத்தில் பிறந்த தோழர் பி.எஸ்.ஆரையே சாரும்.

தஞ்சை மிராசுதாரர்களின் கொட்டத்தை அடக்கி, பண்ணை அடிமை முறையை—வரலாற்றில் நினைவுச் சின்னமாக்கியவர் தோழர் பி.எஸ்.ஆர்.

காவிரியாற்றின் பெருமை இருக்கிறவரை, தஞ்சைத் தரணியில் உழவர் பெருங்குடி மக்கள் உள்ளத்தில் நீங்காத, நெஞ்சம் நிறைந்த தலைவனாகத் தோழர் பி.எஸ்.ஆர் விளங்கி வருவார். பி.எஸ்.ஆரின் லட்சியம் ஈடேறி, சமுதாயத்தில் மாற்றம் ஏற்படும்போது, தமிழகத்தின் கிராமங்களில் சுரண்டலற்ற புதுவாழ்வு மலரும்போது, தமிழ் நாட்டில் விவசாய இயக்கத்துக்கு வித்திட்ட தோழர் பி.எஸ்.ஆரின் பெருமையும் சேவையும் சிறப்பாக நினைவுபடுத்தப்படும்.

3

நதி மூலமும் ரிஷி மூலமும்

"நதி மூலத்தையும், ரிஷி மூலத்தையும் கேட்கக் கூடாது" என்பது பழமொழி.

நதியின் ஊற்றிடத்தை இடம் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. மூலஸ்தானம் எங்காவது இருக்கும். கண்ணுக்குத் தெரியுமாறு இருக்கும் இடத்தைத்தான் பிறப்பிடமாகக் குறிப்பிடுகிறோம்.

நதிகளைப்போலவே ரிஷிகளின் வாழ்வும். வனாந்தரங்களில் திரிந்து தவம் புரியும் ரிஷிகள், தங்கள் வாழ்க்கையைப் பற்றி விரிவாகச் சொன்னதில்லையாம். இவர்களின் வரலாற்றைத் தெரிந்து கொள்வது எளிதல்ல.

தோழர் பி.எஸ்.ஆர். தன்னையே நாட்டுக்கு அர்ப்பணித்தவர். விடுதலை வேள்வியில் குதித்தவர்! சமுதாய மாற்றத்துக்காக - புத்துலகு காணும் புரட்சியில் ஈடுபட்டவர்,

இவரின் பிறப்பு, வளர்ப்பு, பூர்வீகம் பற்றித் தெரிய முயற்சித்தாலும் போதுமான முழு விவரங்களும் கிடைக்கவில்லை.

தனது நெருங்கிய நண்பர்கள் சிலரிடம் அவ்வப்போது சொல்லியதைக் கேட்டுத்தான் தெரிய முடிகிறது.

நியூ செஞ்சுரி புத்தக நிலையத்தின் மூல தஸ்தாவேஜிலிருந்துதான் பிறந்த தேதி பற்றிய விவரம் கிடைத்தது.

தென் கன்னடம் – படகாராவில் 1907-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ந் தேதி பிறந்தார்.

தந்தையின் பெயர் இராமச்சந்திர ராவ்; தாயார் பெயர் தெரியவில்லை.

ஊர் பேரைத் தெரிவிக்காத ஒருவர், எங்கிருந்தோ வந்தவர். மார்க்சியத்தில் ஊறித் திளைத்து–செயலாற்ற நினைத்தார். தமிழ் நாட்டில் ஊர் ஊராகச் சுற்றினார். உழவர்களின் உள்ளங்களோடு உறவாடும் உயர்ந்த லட்சிய வெறி இருக்கும்போது, மொழி ஒரு தடையாக இருக்கவில்லை.

சலியாத உழைப்பு, மக்களின் வாழ்க்கை பற்றி ஆராய்வதில் ஓயாத ஆர்வம், வர்க்கப்போராட்டங்களில் உறுதியான தலைமை. இச்சிறப்புக் குணங்களினால் – தமிழ் நாட்டில் தலை சிறந்த கம்யூனிஸ்டுத் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார்.

4

விளையும் பயிர் முளையிலே

பி.எஸ்.ஆருக்கு அண்ணன்-தம்பி இருவர். சகோதரிகள் ஆறுபேர். பி.எஸ்.ஆர் தான் கடைசிப் பையன். எட்டுவயதுச் சிறுவனாக இருக்கும்போதே தந்தை காலமாகிவிட்டார்.

தாய்மாமனார் அரசாங்க உத்தியோகத்தில் இருந்தார். அந்தக்காலத்தில் சப்-மாஜிஸ்திரேட் வேலை என்றால் அந்தஸ்தும், கௌரவமும் அதிகம்.

தாய்மாமனார் பராமரிப்பில் குடும்பம் வளர்ந்தது. பி.எஸ்.ஆர் சிறு வயதிலேயே படுசுட்டி. எதற்கும் அவ்வளவு இலகுவில் பணிந்துவிடமாட்டார்.

நடுத்தரக் குடும்பம்; வைதீகமானது. கணவனை இழந்ததால் பி.எஸ்.ஆரின் தாயார் இந்துமத முறைப்படி விதவை வாழ்க்கைக்குரிய விதிமுறைகளை அப்படியே அனுஷ்டித்து வந்தார்.

பாயின்றிக் கட்டாந்தரையில் படுத்து உறங்குவது; தவிடு நீங்கிய அரிசி, தும்பைப் பூப்போல வெள்ளையாக இருக்கும் அரிசிச் சாதத்தைத்தான் சாப்பிடுவது. இரவில் சாப்பிடாமல் பட்டினிகிடப்பது. பி.எஸ்.ஆரின் தாயார் இப்பழக்கங்களைத் தவறாமல் கடைப்பிடித்து வந்தார்.

பி.எஸ்.ஆர் துவக்கப் பள்ளியில் படித்துவருகிறார். அப்போது தாயாரின் விரதங்கள் இவர் மனதை உலுக்கியது. தனியாக அழுதார். காரணங்களைக் கேட்டார்; புரியவில்லை. ஏனென்ற கேள்வியே இவரை உறுத்தியது.

திங்கட்கிழமை – சோமவாரம். வழக்கமாக இரவு மட்டுமல்ல; அன்று முழுவதும் பட்டினி.

அன்னை பட்டினியாக இருப்பதைப் பார்த்திருக்க; பி.எஸ்.ஆருக்குச் சகிக்கவில்லை.

"என்னம்மா? பகல் முழுதும் பட்டினி கிடக்கிறாய்" என்றார்.

"சோமவாரம். புருஷனை இழந்த இந்துப் பெண்கள் விரதம் இருக்க வேண்டும்" என்று அம்மா பதில் கொடுத்தார்.

"செத்துப்போன அப்பா, உன் விரதத்தினால் உயிர் பெற்றுத் திரும்பி வருவார்களா?" என்று கேட்டதும், அன்னை அழுது புலம்பினார். இருந்தாலும் பட்டினியை விடவில்லை.

"நானும் சாப்பிடுவதில்லை. நீ சாப்பிட்டால்தான் நானும் சாப்பிடுவேன்" என்று பிடிவாதம் செய்தார். பட்டினியும் கிடந்தார்.

பெற்றெடுத்த அருமை மகன் பட்டினி கிடக்கச் சகிப்பாளா தாய்? "பெற்ற மனம் பித்து! பிள்ளை மனம் கல்லு!" என்பதைப்போல பி.எஸ்.ஆரின் கல்லான உறுதி, பெற்ற தாயின் மனதைப் பித்தாகக் கரைத்தது. மகனின் பிடிவாதத்துக்குப் பணிந்து, விரதத்தை முறித்தார்; உணவு அருந்த ஆரம்பித்தார்.

கிறிஸ்தவப் பள்ளியில் பி.எஸ்.ஆர்.

பி.எஸ்.ஆர் கத்தோலிக்கப் பாதிரியாரின் கிறிஸ்தவப் பள்ளியில் படித்தார். படிக்கும்போது குறும்புத்தனமாகக் கேள்விகளைக் கேட்பாராம்.

பைபிள் பாடம் நடக்கும்போது, ஆதாம்-ஏவாள் கதையைப் பற்றி ஐய வினாக்கள் எழுப்புவார்.

பள்ளி நிறுவனர் நினைவு நாள் விழா (Donor's day)வுக்காக மாணவர்களிடம் நிதி வசூலிக்கப்பட்டது. எல்லா மாணவர்களும் பெற்றோர்களிடம் காசு வாங்கிக் கொடுத்து விட்டனர். பி.எஸ்.ஆர் மட்டும் நிதி கொடுக்கவில்லை. "நிறுவனர் விழாவை நிர்வாகிகள் தானே நடத்த வேண்டும். மாணவர்கள் ஏன் நிதி கொடுக்க வேண்டும்" என்று பி.எஸ்.ஆர் வாதாடினார்.

பள்ளி நிர்வாகிகளான பாதிரியார்கள் பி.எஸ்.ஆரின் குறும்புத்தனத்தைக் கண்டு ஆத்திரம் அடைந்தனர். பி.எஸ்.ஆர் மீது நடவடிக்கை எடுத்தனர்.

சப்-மாஜிஸ்திரேட்டாகப் பணியாற்றிய தாய்-மாமனார் சிபாரிசின் பேரில் மீண்டும் பள்ளியில் சேர்க்கப்பட்டார். பள்ளியில் சிறந்த மாணவனாகப் பெயர் வாங்கினார்.

ஆனாலும், பிஞ்சு மனத்திலேயே போராட்ட உணர்வு ஆழப் பதிந்துவிட்டது.

5

விடுதலை வேட்கை

முதல் உலகப் போர் முடிந்தது. ரஷ்ய நாட்டில் மேதை லெனின் தலைமையில் சோஷலிசப் புரட்சி வெற்றிவாகை சூடியது.

இருள் கவ்விக்கிடந்த இந்திய நாட்டில் ‘பொழுது புலர்ந்தது’ என்று தட்டி எழுப்பக் “கொக்கரக்கோ” எனக் குரல் கொடுக்கும் சேவலாக மகாகவி பாரதி புரட்சி பூபாளம் பாடினார்.

“மாகாளி பராசக்தி உருசிய நாட்டில்
கடைக்கண் வைத்தாள், அங்கே
ஆகா’வென் றெழுந்தது பார்
யுகப்புரட்சி!”

என்று உளமகிழ்ந்து பாராட்டினார்.

உலகெங்கும் உழைப்பாளி மக்களுக்கு ‘சோவியத் உதயம்’ நம்பிக்கை ஒளியாக விளங்கியது.

அடிமை நாடுகளில் அந்திய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துச் சமர்புரியும் விடுதலை வீரர்களுக்குத், தங்கள் பீரங்கிப் படையின் முதல் குண்டு முழக்கமாக சோவியத் புரட்சி அமைந்தது.

இந்தியாவில் ஆங்காங்கே விவசாயிகள் கிளர்ச்சி வெடித்தது. சம்ப்ரான் கேதா விவசாயிகளின் (சத்தியாக்கிரகங்கள்) அமைதியான மறியல் போராட்டங்கள் நடந்தன.

'கிலாபத் இயக்கம்' இந்து-முஸ்லிம் ஒற்றுமையை உருவாக்கியது.

பிரித்தாளும் சூழ்ச்சியில் கைதேர்ந்த பிரிட்டிஷ் ஆட்சி கிளர்ச்சிகளை ஒடுக்கத் திட்டமிட்டது.

ரௌலட் சட்டத்தைக் கொண்டு வந்தது. நாடெங்கும் அடக்கு முறையைக் கட்டவிழ்த்துவிட்டது.

1919 ஏப்ரல் 13-சித்திரை வருடப்பிறப்பு – பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸில் "ஜாலியன் வாலாபாக்" மைதானம். ஆணும் பெண்ணுமாக இருபதினாயிரம்பேர் திரண்டனர். மைதானம் இடம் கொள்ளவில்லை.

"அடிமை மக்கள்" சட்டத்தை மீறித் திரண்டுவிட்டதாக ஆங்கிலேய அதிகாரி நினைத்தான்.

கலைந்து போகக் கட்டளையிட்டான்! இரண்டு மூன்று நிமிடங்களுக்குள் – 1600 ரவுண்டுகள் சுட்டான். சிறுவாயில் வழியாக மக்கள் வெளியே செல்ல முடியாமல் திணறித் தவித்தனர். சிறு கிணற்றில் மாண்டவர் பலர்; துப்பாக்கிச் சூட்டில் செத்தவர் பலர். வெறியர்களின் குண்டு பாய்ந்தது கிணற்றுச் சுவர்களும், பக்கத்து வீடுகளின் சுவர்களும் துளைக்கப்பட்ட துயரக் காட்சிகளை இன்னும் காணலாம். 400 பேர் மடிந்தனர். ஆயிரம் பேர் படுகாயமுற்றனர்.

படுகொலை நடத்திய "ஜெனரல் டையர்"– "சுட்டேன்! சுட்டேன்! குண்டு ரவை தீரும் வரை சுட்டேன்! வெறி தணியும் வரை சுட்டேன்!" என்றான்.

இக் கோரக் கொடுமையைக் கண்டு இளைஞர் உலகம் கொதிப்படைந்தது. நாடெங்கும் கண்டனக் குரல் கிளம்பியது.

1920-ல் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் மகாசபை கட்டளையிட்டது. அமைதியான ஒத்துழையாமை இயக்கத்துக்கு அறைகூவல்விட்டது.

"பெரியவர்களே! அந்நிய ஆட்சி கொடுத்த கௌரவப் பட்டத்தைத் தூக்கி எறியுங்கள்! வழக்கறிஞர்களே! வெள்ளையர்களின் நீதி மன்றங்களில் வழக்காடாதீர்கள்! பெற்றோர்களே! பிள்ளைகளை அந்நியர்கள் நடத்தும் கல்லூரிகளுக்கு அனுப்பாதீர்கள்! மாணவர்களே! அந்நியக் கல்வி முறையை எதிர்த்து வெளியேறுங்கள்! தேசியக் கல்லூரிகளில் சேருங்கள்!" என்ற காங்கிரஸ் மகாசபையின் கட்டளை காட்டுத் தீபோல் பரவியது. 1920-25வது வருடங்களில் நாட்டுப்பற்றுள்ள மாணவர்கள் வெளியேறினார்கள். இக் கொந்தளிப்பில் பி.எஸ்.ஆர் – ஒதுங்கி நிற்பாரா?

பி.எஸ்.ஆர் பெங்களூரில் கிறிஸ்தவக் கல்லூரியில் படித்து வந்தார். கல்வியில் முதல் தரமான மாணவராகத் திகழ்ந்தாலும், விடுதலை வேட்கை கொண்டதால், படிப்பில் நாட்டம் செல்லவில்லை.

"வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்றும் கொள்வாரோ? - என்றும்
ஆரமு துண்ணுதற்கு ஆசை கொண்டார்-
தன்னில்
அறிவைச் செலுத்துவாரோ?"

என்று மகாகவி பாரதியார் பாடிய இந்த நிலையில் பி.எஸ்.ஆரும் இருந்தார்.

அந்நியக் கல்வியை உதறி எறிந்தார். பாடப் புத்தகங்களை இறைப்பில் வைத்தார். விடுதலையே உயிர் மூச்சாகக் கொண்டார்.

தகப்பனில்லாத பையன்! தாயின் செல்லப்பிள்ளை! இருப்பினும் பிடிவாதக்காரன்! அரசாங்க அதிகாரியான தாய் மாமனாரின் கண்டிப்பு. இந்த நிலையில் நாட்டுப்பற்றில் ஊறித் திளைத்துச் செயல்வீரனாக மாறும் மாணவனின் கதி எவ்வாறிருக்கும்? அவர் எழுத்திலேயே படித்தால் — நிலையை அப்படியே புரிந்து கொள்ளலாம் அல்லவா!

"அக் காலத்தில் 'சுயராஜ்யம்' என்ற வார்த்தை எல்லா இளைஞர்களையும் தியாக அக்னியில் குதிக்கும்படி ஆவேசமூட்டியது. ஒரு மந்திரச் சக்திபோல் மக்களைத் தட்டி எழுப்பியது. தாய், சகோதரன், உற்றார், உறவினர், நண்பர், படிப்பு எல்லாவற்றையும் உதறித் தள்ளி காலேஜை விட்டு வெளியேறி அன்று நடந்த ஒத்துழையாமை இயக்கத்தில் குதிக்கும்படி எனக்கு அந்த வார்த்தை உணர்ச்சியூட்டியது. தேசிய இயக்கத்தில் சேர்ந்ததற்காக நான் வீட்டைவிட்டு விரட்டப்பட்டேன். சொல்லொணாக் கஷ்டங்கள் என்முன் மலைபோல் நின்றன.

எல்லாவற்றையும் புன்முறுவலுடன் சகித்துக் கொள்ள இந்த வார்த்தை எனக்கு உயிர் கொடுத்தது''(பக்கம் 103)

"தலை மறைவு வாழ்க்கையில் எனது அனுபவம்'' கல்லூரி மாணவப் பருவத்தில் முளைவிட்ட நாட்டுப் பற்றும், விடுதலை வேட்கையும் – பி.எஸ்.ஆரின் மூச்சு அடங்கும் வரை தணியவில்லை – மேலும் மேலும் வளர்ந்தது; உணர்ச்சிப் பிழம்பாக பி.எஸ்.ஆர் வாழ்ந்தார்.

6

சிங்கப்பூரில் சில வருடங்கள்

கல்லூரிப் படிப்புக்கு முழுக்கு. வீட்டில் வாழ முடியவில்லை. அரசியல் ஆவேசத்தையும் கட்டுப்படுத்தி, குடும்பத்தில் அடங்கி நடக்கவும் விரும்பவில்லை.

வீட்டைவிட்டு வெளியேறினார். ஊர் ஊராகச் சென்றார்; நாடெங்கும் சுதந்திரப் பறவையாகச் சுற்றித் திரிந்தார்.

எப்படியோ சிங்கப்பூர் போய்ச் சேர்ந்தார். தாயகத்தில் பட்ட இன்னல்களிலிருந்து சிறிது விடிவு கிடைத்தது. வாழ்க்கையிலும் வசதி பெற்றார்.

சொந்தத்தில் சிறு உணவு விடுதி நடத்தினார். ஓரளவு நல்ல வருமானமும் கிடைத்தது. சிங்கப்பூர் ஹோட்டல் பழக்கத்தில்- சமையல் கற்றுக் கொண்டார்.

தமிழ் நாட்டுச் சிறைகளில் அரசியல் கைதிகளுக்கு இவர் சமைத்துக் கொடுப்பார்; ருசியாக இருக்கும். மாநாடுகளிலும் சமையலைச் சரியாக மேற்பார்வையிடுவார்.

சிங்கப்பூர் உணவு விடுதிதான் — பி.எஸ்.ஆர் வசதியாக வாழ்ந்த காலம். சிங்கப்பூர் பழக்கத்தில் சிகரெட்டுகள்

ஏராளமாகப் புகைத்தார். ஆடம்பர வாழ்க்கையை அனுபவித்திருக்கிறார்.

சிங்கப்பூரிலிருந்து சென்னை வந்தார். சிகரெட் பழக்கம் சென்னையிலும் சில வருடங்கள் தொடர்ந்தது.

தோழர். சீனிவாசராவ், சிங்கப்பூர் சகவாசம் பற்றிச் சிறிதும் சபலம் கொள்ளவில்லை.

விடுதலை வெறியில் திளைத்த பி.எஸ்.ஆர். மீண்டும் அரசியலில் தீவிரமாக ஈடுபாடு கொண்டார்.

பாக்கெட் கணக்கில் உயர்ந்தரக சிகரெட் புகைத்தவர் என்று யாரும் நம்பமுடியாதிருக்கிறது. பிடிவாதமாக அப்பழக்கத்தை மாற்றிவிட்டார்.

வேண்டாத பழக்கங்களை நிறுத்த முடியாமல் சபலப்படுவோருக்கு – தோழர் பி.எஸ்.ஆரின் வாழ்க்கை சிறந்த வழிகாட்டியாக அமைந்துள்ளது.

7

அந்நியத் துணிக்கடை மறியல்

1920-30வது ஆண்டுகளில் இந்தியாவில் எங்கு நோக்கினாலும் இளைஞர்களிடையே பெரும் கொந்தளிப்பு.

புரட்சி இயக்கத்தின் முன்னணிப் படையான தொழிலாளி வர்க்கம் தனக்கென அகில இந்திய தொழிற்சங்க அமைப்புகளை உருவாக்கிக்கொண்டது.

தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் தானைத் தலைவனான இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 1925-ல் கருக்கொண்டது.

இந் நிகழ்ச்சிகள் – ஏகாதிபத்திய ஆட்சியின் கண்ணை உறுத்தியது. புரட்சி இயக்கங்களை - அமைப்புகளைக் கருவிலேயே சிதைத்துவிட வேண்டுமென்று கங்கணங் கட்டியது.

1924-ல் கான்பூர் கம்யூனிஸ்ட் சதி வழக்கு: தோழர்கள் டாங்கே, சிங்காரவேலு செட்டியார் போன்ற தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்தியாவுக்கு வந்த சைமன் தூதுக் குழுவை எதிர்த்து – "சைமன் கமிஷனே திரும்பிப் போ" என்று நாடெங்கும் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

1929-ல் மீண்டும் மீரத் கம்யூனிஸ்ட் சதி வழக்கு போடப்பட்டது.

தோழர்கள் காட்டே, ஜோஷி, டாங்கே – மற்றும் கம்யூனிஸ்ட் கருத்துள்ள வாலிபர்கள் – இந்தியா முழுவதும் கைது செய்யப்பட்டனர்.

கம்யூனிஸ்ட் கட்சி கருக்கொண்ட உடனேயே ஏகாதிபத்திய அரசு நடுங்கி ஜன்னி வேகத்தில் அடக்குமுறை செய்வதைக் கண்ட இளைஞர்களுக்கு மேலும் ஆவேசம் அதிகரித்தது.

படித்த வாலிபர்கள் பலர் கம்யூனிசக் கருத்துக்கு இசைவு கொண்டார்கள். தங்கள் இலட்சியமாக ஏற்றுச் செயலாற்ற முன் வந்தார்கள்.

இதே காலத்தில்தான்–காந்திஜி–ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்கினார்.

கடல் நீரிலிருந்து எடுக்கும் உப்புக்கு, வரிபோட– கடல் கடந்து வந்த அன்னியனுக்கு அதிகாரம் ஏது? எனக் குரல் எழுப்பினார். உப்புக்கும் வரியா? எனக் கேட்டது – நாட்டு மக்களைக் கவர்ந்தது.

கரிசல் மண்ணில் பருத்தி விளைவிப்பது நாம். கொட்டை நூற்று, நூலாக்கி, பாலாடை போன்ற நூலாடைகளை நெய்த கைவண்ணமிக்க நெசவுத் தொழிலாளர்கள் நலிந்து சாகும்போது. இங்கிலாந்திலிருந்து இறக்குமதியாகும் 'கிளாஸ்கோ மல்' துணியை, பாரத நாட்டில் விற்பனை செய்வது அநியாயம் என்று கண்டித்தார் காந்தி அடிகள்.

இந்தியத் துணியை லண்டனில் விற்பனை செய்யும் வியாபாரிக்குத் தண்டனை, வாங்குபவனுக்கு அபராதம். இது இந்திய நாட்டை ஆண்டு வந்த பிரிட்டிஷ் அரசின் ஆணை.

"அந்நியத் துணியை பகிஷ்கரிப்போம். விற்பனை செய்யும் கடைகளில் மறியல் செய்வோம்:" என்பது காங்கிரஸ் கட்டளை.

1930ல் உப்புச் சத்தியாக்கிரகம், "தண்டி கடற்கரைக்குக் காந்திஜி தலைமையில் யாத்திரை புறப்பட்டது. உப்புச் காய்ச்சத் தொடங்கியதும் காந்திஜி கைது செய்யப்பட்டார்.

தமிழ்நாட்டிலும் வேதாரண்யத்தில் ராஜாஜி, தி.சௌ.ராஜன் (டி.எஸ்.ராஜன்) தலைமையில் உப்பு சத்தியாக்கிரகம் நடந்தது.

ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்கள் நாடு முழுவதும் பல ரூபங்களில் நடைபெற்றது. இளைஞர்கள் தீவிரமாகப் பங்கேற்றனர்.

சென்னை நகரில் பல போராட்டங்கள் நடந்தன. பி.எஸ்.ஆர். கலந்து கொண்டார்.

1930-ல் இரண்டு தடவைகள் தோழர் சீனிவாசராவ் கைது செய்யப்பட்டார்.

1932 இல் அந்நியத் துணி விற்பனை செய்யும் கடைகள் முன்னால் நாள்தோறும் மறியல் நடைபெற்றது. குறிப்பாக, சீனிவாசராவ் மறியல் நடத்தும்போது போலீஸ் அடக்குமுறை அதிகமாகவே இருக்கும்.

சென்னை பூக்கடை வீதியில் ஒரு துணிக்கடை இன்றும் இருக்கிறது. இக்கடையில் பிரிட்டிஷ் மல் துணிகளைத்தான் விற்பனை செய்வது வழக்கம்.

ஒருநாள் மாலை, இந்தக் கடைக்குச் செல்பவர்களைச் சீனிவாசராவ் தடுத்துக் கொண்டிருந்தார்.

சீனிவாசராவ் கட்டிளங்காளை! வசதிக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண் அக் கடைக்கு வருகிறாள்; நாகரிக உடை அணிந்திருந்தாள். இளம் வாலிபன் பி.எஸ்.ஆர். – தேசபக்த உணர்வில் கெஞ்சிக் கேட்கிறார் – "அந்நியத் துணியை வாங்காதீர்" என்று மன்றாடுகிறார்! நாகரிக மோகத்தில் அப்பெண் அகங்காரத்தோடு நடந்தாள்!

பி.எஸ்.ஆர். துடிப்பானவர். அடுத்தவர்களை மதிக்காத அகம்பாவக்காரர்களைக் கண்டால் எதிர்த்துச் சாடும் இயல்புடையவர். யாருக்கும் தலை வணங்காத அஞ்சாத நெஞ்சன்.

அமைதியாக மறிப்பதையும் மீறி மமதையோடு நடை போடுவதைக் கண்டு ஆத்திரம் அடைந்தார்!

மறித்தார்!" "போகாதீங்க!."என்றார்

"காந்தி–பெண்களையுமா மறிக்கச் சொல்லியிருக்கிறார்" என்று சிணுங்கினாள். சீனிவாசராவுக்குக் கோபம் சிரசுக்கு ஏறிவிட்டது.

காந்தியைப் பற்றிப் பேச உனக்கு உரிமை ஏது? நீ இந்தியப் பெண்தானா? இந்தியனுக்குப் பிறந்தவளா? என்று சாடிவிட்டார்.

காத்திருந்த காவல் துறையினர் பி.எஸ்.ஆர். மீது பாய்ந்தார்கள். நையப் புடைத்தனர்; மிதித்துத் துவைத்தார்கள்.

இது போன்ற நிகழ்ச்சிகள் அன்றாடம் நடக்கும். மீண்டும் மீண்டும் அந்நியத் துணி பகிஷ்கரிப்புக்கு வந்து விடுவார்.

மற்றொரு நாள்!

இதே கடை முன்பு மறியல் நடத்தினார்.

பி.எஸ்.ஆரின் நடவடிக்கை போலீஸ்காரர்களுக்குத் தொந்தரவாகத் தெரிந்தது. அளவுக்கு மிஞ்சி அடக்குமுறை செய்தார்கள்.

லாத்தி கம்புகளால் எலும்பை எண்ணி அடித்தார்கள். துப்பாக்கிப் புடங்களால் குத்தினார்கள். வீர இளைஞன் மயங்கி விழும்வரை அடித்தார்கள். நாயை அடிப்பது போல அடித்துத் துவைத்தார்கள். 'பூட்ஸ்' கால்களால் மிதித்துத் தள்ளினார்கள்.

பி.எஸ்.ஆர். சக்தியுள்ள மட்டும் எதிர்ப்புக் கோஷங்கள் முழங்கினார். வர வர மூச்சும் திணறியது.

செத்துவிட்டாரென்று, சாக்கடையில் தூக்கி எறிந்தார்கள்.

இக் கொடுமையைப் பார்த்து நின்ற மக்கள் பரிதவித்தனர். கண்ணீர்விட்டார்கள். போலீஸ் கொடுமையை எதிர்த்துப் பாயச் சக்தியற்று நின்றார்கள். புலம்பினார்கள். தேம்பித் தேம்பி அழுதார்கள்.

செத்த நாயைத் தூக்கி எறிவதைப் போல்— பி.எஸ்.ஆரை சாக்கடையில் எறிந்து சென்றனர்— காவல் துறையினர்.

ஆங்கிலப் பத்திரிகையில் "காங்கிரஸ் தொண்டர் பி.எஸ்.ஆர் இறந்து விட்டார்' என்ற செய்தி பிரசுரிக்கப் பட்டது.

போலீஸ் விலகிச் சென்ற பிறகும்கூட, குற்றுயிராகக் கிடக்கும் இளைஞன் பக்கம் போக யாருக்கும் துணிச்சல் வரவில்லை.

ஒரு தாய்! சுற்றுமுற்றும் பார்த்தாள். யாரும் இல்லை. சாக்கடையில் உழன்று கொண்டிருக்கும் இளைஞனைத் தொட்டுப் பார்த்தாள். நெஞ்சில் கை வைத்து அழுத்தினாள். இளைஞனுக்கு இதயத் துடிப்பு இருந்தது.

மூக்கின் பக்கம் கை வைத்தாள். மூச்சு திணறுவதைக் கண்டாள். கண்ணிமையைத் திறந்து பார்த்தாள்!

இளைஞனை வாரி எடுத்தாள். மையிருட்டில், யாரும் கவனிக்காத நேரத்தில் அருகிலுள்ள தன் வீட்டுக்குள் எடுத்துச் சென்றாள்.

வீட்டில் தனி அறை. வெந்நீர் ஒத்தடம் கொடுத்து உடல் கழுவிவிட்டாள். பெற்றெடுத்த பிள்ளையைப்போலப் பேணினாள். இவ்வளவு சிசிச்சைக்குப் பின்னர்தான் பி.எஸ்.ஆருக்குச் சுய நினைவு வந்தது.

"எங்கோ பிறந்தோம். எங்கேயோ வளர்ந்தோம். சிறு வயதில் தந்தையை இழந்தோம். இளம் வயதில் தாயை விட்டுப் பிரிந்தோம். தாய் நாட்டின் விடுதலைக்காகப் பிறந்த வீட்டையும், பெற்றெடுத்த தாயையும் விட்டுப் பிரிந்த தனக்கு-தன் உயிரை மீட்டிப் பேணிப் பணிவிடை செய்யும் தமிழ்த் தாயைக் கண்திறந்து திகைத்துப் பார்த்தார்......"

"இனந் தெரியாத வீட்டில் இருக்கிறோமே" என்று தயங்கினார்.

வேதனை ஒரு புறம். வேற்றிடம் என்ற தயக்கம். எவ்விதப் பற்றுக்கோடுமில்லாத இளைஞனுக்கு—ஒரு தாய் செய்யும் பணிவிடை கண்டு இனம் தெரியாத கூச்சத்தோடு, மனம் குழம்பிய நிலையில் பி.எஸ்.ஆர். காணப்பட்டார்.

உயிர்ப் பிச்சை அளித்த அன்புத் தாய் "தம்பி! உடல் தேறியதும் வெளியே செல்லலாம். தாயைப் போல நினைத்துக் கொள். தயக்கம் வேண்டாம். தைரியமாக இரு" என்று ஆறுதல் கூறினாள்.

தாயின் பரிவுக்கு இசைந்து அந்த வீட்டிலேயே தனி அறையில் தங்கி இருந்தார்.

இந்தச் சம்பவத்தை-தான்பட்ட வேதனையை – தோழர் பி.எஸ்.ஆர். சொல்லும் போது – நமக்குக் கண்ணீர் வரும். ஆனால் அவரோ – நஞ்சை உண்ட சிவபெருமானைப்போல – வேதனைகளை உள்ளடக்கி நகைச்சுவையோடு கூறுவார். எல்லாக் கொடுமைகளையும் தன் உடம்பில் தாங்கிச் சகித்துக் கொண்டதால், தான் பட்ட தொல்லைகள் கூட அவருக்குச் சாதாரணமாகிவிட்டது.

தன்னைப் பாதுகாத்த தமிழ்த் தாயின் சிறப்பை வாயாரப் புகழ்வார். கேட்ட நமக்கு மயிர்க் கூச்செறியும்.

அந்தத் தமிழ்த்தாய் – அன்றைய சமுதாயத்தில் – கொச்சையாகச் சொன்னால் ஒரு "தேவடியாள்." பணக்கார நாட்டுக்கோட்டை நகரத்தார் ஒருவரின் ஆசை நாயகி.

"தேவடியாளென்று" ஒதுக்கித் தள்ளப்பட்ட ஒரு அன்னையின் – அன்புப் பாசத்தையும், துணிச்சலையும் தோழர் பி.எஸ்.ஆர். எத்தனையோ முறை கூறக் கேட்டிருக்கிறேன்.

இச் சம்பவத்தை நெஞ்சிலிருத்தி, நீந்திக் கொண்டே வந்தார். தமிழ் நாட்டுக்கும், உழைக்கும் மக்களுக்கும் பணியாற்றும்போது, இத் தமிழ்த் தாயின் பாசத்தை என்றும் மறக்கவேயில்லை.

8

ஜார்ஜ் மன்னருக்கு வெள்ளி விழா

1935 – ஐந்தாம் ஜார்ஜ் மன்னர். பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின் சக்கரவர்த்தியாகப் பட்டத்துக்கு வந்த இருபத்தைந்தாவது ஆண்டு.

வெள்ளி விழா.

லண்டன் மாநகரில் முடிவு. பிரிட்டனுக்கு உட்பட்ட காலனி அடிமை நாடுகளிலும் கோலாகலமாகக் கொண்டாட வேண்டுமென்று உத்தரவு.

இந்தியாவும் அப்போது அடிமை நாடு அல்லவா! அரசு ஆணையாகப் பிறப்பிக்கப்பட்டது.

"கருணை உள்ளம் படைத்த மன்னனை ஆண்டவன் காப்பாற்றுவாராக!

"God Save our Gracious King" பள்ளிப் பிள்ளைகள் எல்லாம் பாராமல் மனப்பாடம் செய்ய வேண்டும். ஆரம்பக் கல்வி பயிலும் மாணவர்களுக்கே அடிமைப் புத்தி புகட்டப்பட்டது. சக்கரவர்த்திக் கோமகன் இந்தியாவுக்குப் பவனி உலா வந்தார். டில்லியில் தர்பார் நடைபெற்றது.

டில்லி தர்பாரில் கலந்து கொள்ளுமாறு காங்கிரஸ் மகா சபைக்கும் அழைப்பு வந்தது.

அடிமைப்படுத்தியிருக்கும் பிரிட்டிஷ் ஆட்சியின் சின்னமான அரசனுக்கு அளிக்கப்படும் தர்பார் விருந்தில் கலந்து கொள்ள முடியாதென்று பதிலுரைத்தது.

வெள்ளிவிழா கூட்டங்களில் கலந்துகொள்ளக் கூடாதென்றும் மாநிலக் கிளைகளுக்குத் தெரிவித்தது.

சென்னை நகரத்தில் வெள்ளி விழா கோலாகலமாக நடந்தது.

நகரத்தின் சோஷலிஸ்ட் கட்சிச் செயலாளர் தோழர் பி.எஸ்.ஆர். நகரக் காங்கிரஸ் கமிட்டியிலும் முக்கிய பொறுப்பில் இருந்தார்.

'சாத்வீகம்' 'அமைதி' என்பதெல்லாம் இவருக்கு ஒத்துவராது. எதாவது செய்ய வேண்டும் என்று நினைத்தார்.

தோழர் அங்குச்சாமி சென்னை நகரக் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராக இருந்தார். (இவர் என்.சி.பி.எச் புத்தக நிலையத்தில் பணியாற்றியிருக்கிறார். 1943-ல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிதிக்காகத் தன் வீட்டை விற்று எட்டாயிரம் ரூபாய் கொடுத்தார்.)

அங்குச்சாமியோடு இன்னும் மூன்று பேரைச் சேர்த்தார். ஜார்ஜ் மன்னனின் வெள்ளி விழாவுக்கு எதிர்ப்பு தெரிவித்துத் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கச் செய்தார். பிராட்வே சினிமா தியேட்டரில் சினிமா பார்க்கவும் கொஞ்சம் காசைக் கொடுத்தார். இடைவேளை முடிந்ததும்

கொட்டகைக்குள்ளும் துண்டுப் பிரசுரங்களைக் கொடுக்கச் செய்தார்.

ஊழியர்களிடம் கொடுத்துவிட்டு, இவராலும் சும்மா இருக்க முடியவில்லை.

திருவல்லிக்கேணி கடற்கரையில் காங்கிரஸ் பொதுக் கூட்டம். அக் கூட்டத்திலும் "மன்னன் வெள்ளி விழா" எதிர்ப்புப் பிரசுரத்தை எல்லோரிடமும் கொடுத்துப் பிரச்சாரம் செய்தார்.

சிறு நோட்டீஸ் துண்டைக் கண்டு கூட ஏகாதிபத்திய ஏவலாளர்களுக்கு அச்சம் தீரவில்லை. "தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி பத்தடி பாயும்" என்பார்கள். போலீஸ்காரர்கள் பாய்ந்தார்கள்! பி.எஸ்.ஆர். கைதாக விரும்பவில்லை. ஓடினார். காவல் துறையினரும் நாலாப் பக்கமும் சூழ்ந்து விரட்டிப் பிடித்தார்கள். கொடிய மிருகங்களின் பிடியிலிருந்தாவது தப்பிவிடலாம்! ஆதிக்க வெறி கொண்ட அடியாட்களிடம் 'மனிதன்' அகப்பட்டால் சும்மாவா விடுவார்கள். அடிபட்டதோடு மட்டும் வெறி தணியவில்லை. பி.எஸ்.ஆரைச் சிறையில் தள்ளினார்கள்.

எத்தனை ஆண்டுகள் சிறையிலிட்டாலும் அவர் எண்ணத்தை மாய்க்க முடியவில்லை.

பி.எஸ்.ஆர். – ஏகாதிபத்தியத்தின் வைரி!

9

நேத்தாஜியும் சீனிவாசராவும்

1932–

சுபாஷ் சந்திரபோஸ் கைது செய்யப்பட்டார். சென்னைச் சிறையிலிருந்தார்.

அந்நியத் துணிக் கடை மறியலில் பி.எஸ்.ஆரும் கைது செய்யப்பட்டார்.

போஸ் ஐ.சி.எஸ். பட்டம் பெற்றவர். அரசியலில் தீவிரவாதியாக இருந்ததால், இளைஞர்களின் இலட்சியத் தலைவராக விளங்கினார்.

அப்போது சுபாஷ்போஸுக்கு வயது 35. பி.எஸ்.ஆருக்கு வயது 25. போஸ் மீது பி.எஸ்.ஆருக்கு அளவு கடந்த மரியாதை.

சிறையில் நேதாஜியை அடிக்கடி சந்திப்பார். பொழுது போவது தெரியாமல் எத்தனையோ விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டே இருப்பாராம்.

1939-ல் –

அகில இந்திய காங்கிரஸ் தேர்தல் நடந்தது. பட்டாபி சீத்தாராமையாவைக் காந்திஜி ஆதரித்தார்.

தீவிரவாதிகளெல்லாம் சுபாஷ் சந்திரபோஸை ஆதரித்தனர். தமிழ் நாட்டிலிருந்து பி.எஸ்.ஆர். ஜீவா, ராமமூர்த்தி, திரு. காமராஜ் போன்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்கள் எல்லாம் சுபாஷையே ஆதரித்து ஓட்டளித்தார்கள்.

திரிபுரா காங்கிரஸ் மகா சபையில் சுபாஷ் சந்திரபோஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

காங்கிரஸ் தலைவர் பதவியை ராஜினாமா செய்து விட்ட நேத்தாஜி பார்வர்டு பிளாக் கட்சியைத் துவக்கினார். அக்கட்சியின் தலைவர் என்ற முறையில் சென்னை வந்தார்.

1939-செப்டம்பர் 1—

சென்னை, பிராட்வேயில் 2/65 எண் கட்டடம். சோஷலிஸ்ட் கட்சி, அச்சுத் தொழிலாளர் சங்கம் இரண்டு அலுவலகங்களும் ஒரே இடத்தில் இருந்தன. இதே இடத்தில் நேத்தாஜிக்கும் பி.எஸ்.ஆர். விருந்து நடத்தினார்.

அன்றிரவு வட சென்னை ராபின்சன் பூங்காவிலும், உயர் நீதி மன்றக் கடற்கரையிலும் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

கடற்கரைப் பொதுக் கூட்டத்தில் பி.எஸ்.ஆர். தலைமை தாங்கினார். பிரிட்டிஷ் ஆட்சியைக் கண்டித்துப் பேசினார்.

நேத்தாஜி தீப்பொறி கக்கப் பேசிக் கொண்டிருக்கிறார்.

மாலைப் பத்திரிகை தலைவரிடம் கிடைத்தது. அதைப் படித்ததும், பரபரப்பாக நேத்தாஜிக்குத் தெரிவித்தார். முழங்கிக் கொண்டிருந்த நேத்தாஜிக்கு மேலும் ஆவேசம் பொங்கியது.

1939-செப்டம்பர் முதல் நாள், ஜெர்மன் நாஜித் தலைவர் ஹிட்லர், போலந்து மீது படை எடுத்தான்.

செப்டம்பர் 3-ம் நாள், உலகப் போர் மூண்டது.

பிரிட்டிஷ் ஆட்சி இந்திய மக்களைக் கேட்காமல் யுத்தத்தில் ஈடுபடுத்தியது. நேத்தாஜி சென்னை வந்த இரு தினங்களிலும், நேத்தாஜியும், பி.எஸ்.ஆரும் அந்நிய ஆட்சியைக் கண்டித்துப் பேசினார்கள்.

சில நாட்களில் தோழர் சீனிவாசராவ் திருச்சிக்குச் சென்றிருந்தார். யுத்த எதிர்ப்புப் பிரச்சாரம் செய்ததாகக் கைது செய்யப்பட்டார்.

நேத்தாஜியும் பி.எஸ்.ஆரும் நெருங்கிய நண்பர்களாக இருந்தாலும் — காலப் போக்கில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களில் — இருவரின் போக்கும் நாட்டின் விடுதலைப் போரில் இருவேறு திசைகளில் திரும்பியது.

10

கம்யூனிஸ்டான கதை

படிக்கும்போது படுசுட்டி. எதை எடுத்தாலும் ஏன்? எதற்கு? என்று கேட்டுத் தெரிவதிலே ஒரு தனி ஆர்வம்.

எட்டாம் படிவத்திலேயே கிறிஸ்தவப்பாதிரி ஆசிரியரின் கண்டனத்துக்கு ஆளானார்.

தேசபக்தக் கனலில் மூழ்கினார். கல்லூரியைவிட்டு வெளியேறினார். படிக்காத உனக்கு, வீட்டிலும் சாப்பாடு இல்லை என்றவுடன் வீட்டையும் துறந்தார்!

நாடெல்லாம் சுற்றித் திரிந்து சென்னையில் அடைக்கலமானார். தீவிர அரசியலில் ஈடுபட்டார்.

அந்நியத் துணிக்கடை மறியலில் கொடிய அடக்குமுறை. 1930-ல் இரு முறை கைது; தண்டனை.

1932-ல் மீண்டும் கைது. ஆறு மாதம் தண்டனை கிடைத்தது.

அறிவினிலே உண்மை ஒளி உண்டாகி விட்டால்—
நாட்டுப் பற்றும், மக்கள் மீதும் அன்பும்
பாசமும் கொண்டால்—
எளியோர் மீதும் இரக்கமும்

எத்தர்களின் பேரில் ஆத்திரமும் கொண்ட இலட்சியவாதியின் கொள்கை – எதுவாக இருக்க முடியும்?

தோழர் பி.எஸ்.ஆர். – அவரே எழுதுகிறார் படிப்போம்:

“1921-22-ம் வருடப் போராட்டம் முடிவடைந்தது. தோல்வி கண்டபின் தேசிய இயக்கமே பின்னால் தள்ளப்பட்டுவிட்டது. கலாசாலையைவிட்டு வெளியேறிய நான், இடத்திற்கு இடம், ஊருக்கு ஊர் நாடோடியாக அலைந்து திரிந்தேன். மறுபடியும் 1930-ல் போராட்டம் வந்ததும் நான் அதில் சேர்ந்தேன். திருச்சியில் கைது செய்யப்பட்டுச் சிறைக்குள் தள்ளப்பட்டேன்.

நான் ஒரு நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவன். எனவே அவ்வகுப்புக்கு இயற்கையாகவே அமைந்த எல்லாக் கெட்ட குணங்களும் என்னிடம் பூரணமாக இருந்தன. வீட்டிலும் சரி, ஹோட்டலிலும் சரி, நான் சாப்பிடும் உணவில் ஒரு அணுப்பிரமாணம் வேறு எதாவது கருப்பாக இருந்து விட்டாலும்போதும், பார்க்க வேண்டுமே என் ஆவேசத்தை, பிளேட்டுகளை சாதத்துடன் அப்படியே வீசி எறிந்து விடுவேன். ஆனால் ஜெயிலில் எனக்கு அதற்கெல்லாம் சரியான பாடம் கிடைத்தது. ‘சி’ கிளாசில் இருந்ததால் எனக்குக் கிடைத்தது மக்கிப்போன அரிசிச் சாதம்தான். அதிலும் ஏராளமான புழு, பூச்சிகள். நான் இப்பொழுது யாரைக் குறை கூற முடியும்? இது எனக்கு ஒரு நல்ல பாடம் கற்பித்தது. அது, ‘எது உனக்குக் கிடைத்தாலும் அதைச் சாப்பிடு’ என்பதேயாகும். அன்றிலிருந்து நான் எந்த உணவையும் விலக்கித் தள்ளுவதே இல்லை. என்ன

கிடைத்தாலும் சாப்பிடுவதற்கு என்னைப் பழக்கப்படுத்திக் கொண்டேன்.

சிறையில் எத்தனையோ தேசபக்தர்களுடன் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. பல்வேறு அபிப்பிராயங்கள் கொண்டவர்களும் இருந்தார்கள். வங்கப் பயங்கர இயக்கவாதிகளில் சிலரும் திருச்சிச் சிறையில் இருந்தார்கள். அந்தக்காலத்தில் எனக்கு அரசியலைப் பற்றி ஒன்றும் தெரியாது. வெகு சுலபமாக உணர்ச்சி வேகத்தின் வலையில் சிக்குவேன். 1930-ல் இரண்டு தடவை சிறைத் தண்டனை கிடைத்தது. முடிவாகக் காந்தி -இர்வின் ஒப்பந்தம் நடந்ததும் விடுதலை செய்யப்பட்டேன்.

நான் மறுபடியும் 1932-ல் கைது செய்யப்பட்டேன். ஆனால் தண்டிக்கப்பட்டுச் சிறைக்குள் தள்ளப்படுமுன் மூன்று முறை நான் மிகவும் கடுமையாக லத்தியினால் நொறுக்கப்பட்டேன். நான் செய்ததெல்லாம், சென்னையிலுள்ள சில பெரிய ஜவுளிக் கடைகளின் முன் நின்று அந்நியத் துணி மறியல் செய்ததேயாகும். . .நான் சென்னைச் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டேன். அப்பொழுது சிறையில் சுபாஷ்பாபு, முகுந்தலால் சர்க்கார், கம்யூனிஸ்ட் அமீர் ஹைதர்கான் முதலியோர் இருந்தார்கள்.

சுபாஷ் சந்திரபோஸ் மீது எனக்குக் கவர்ச்சி ஏற்பட்டது. பொழுது போவது தெரியாமல் அவருடன் எத்தனையோ விஷயங்களைப் பற்றிப் பேசுவேன். ஆனால் எனக்கு எந்த விதமான அரசியல் தெளிவும் அதனால் ஏற்படவில்லை.

ஒரு நாள் மாலை ஒரு சிறு சம்பவம் நடந்தது. அச் சம்பவம்தான் என் வாழ்க்கையை அடியோடு மாற்றி,

அரசியல் ஞானத்தை எனக்களித்து, நான் இன்று கட்சிக்குள் இருக்கும் பெரும் பேற்றிற்கு அடிகோலியது. நான் சுபாஷ் போஸிடம் பேசிக் கொண்டிருந்து விட்டு என்னுடைய இடத்துக்குத் திரும்பினேன். என் பின்னாலேயே தோழர். அமீர் ஹைதர்கானும் கையில் ஒரு சிறு புத்தகத்துடன் வந்தார். அந்தப் புத்தகத்தை என்னிடம் கொடுத்து வாசிக்கச் சொன்னார். முதலில் புரிந்து கொள்ளுவது சற்றுச் சிரமமாயிருக்குமென்று தெரிவித்தார்.

எனக்குத்தான் நடுத்தர வர்க்கத்துக்கு இயற்கையாக இருக்கும் மண்டைக் கனம் அதிகமாக இருந்ததே. எனவே "உங்களைக் காட்டிலும் அதிக இங்கிலிஷ் தெரியும். எனக்கு என்ன சிரமம் இருக்கப் போகிறது" என்று சிரித்துக் கொண்டே தோழர். கானிடம் கூறினேன். அந்தப் புஸ்தகம் கார்ல் மார்க்ஸினுடையது —**"கம்யூனிஸ்ட் அறிக்கை"**யேயாகும் (**Communist Manifesto**).

தோழர் கானைப்பற்றி ஒரு வார்த்தை. இவர் அமெரிக்காவுக்குத் தொழிலாளியாகப் போனார்.

அங்குதான் இங்கிலிஷ் பேசுவதற்குக் கற்றுக் கொண்டார். ஆனால் அது நன்கு தெரியாது. இருந்தபோதிலும் தன்னுடைய எண்ணங்களை நன்றாகப் பிறர் மனதில் பதியும்படி ஆங்கிலத்தில் சொல்வதற்கு அவருக்குத் திறமையுண்டு. பள்ளிக்கூடத்தில் அவர் ஆங்கிலத்தில் படித்ததே இல்லை.

அன்றிரவு அப் புத்தகத்தைத் திரும்பத் திரும்பப் படித்தேன். ஆனால் "உழைப்பு - சக்தி", "நிரந்தர மதிப்பு", "உபரி மதிப்பு" போன்ற வார்த்தைகளுக்கு எனக்குப்

பொருள் விளங்கவில்லை. இவ்வார்த்தைகளுக்குப் பொருள் தெரிந்தாலொழிய அப் புத்தகத்தை நன்றாகப் புரிந்து கொள்ள முடியாது. ஆதலால் சலிப்புடன் அப்புத்தகத்தை ஒரு மூலையில் எறிந்துவிட்டுப் பேசாமல் நிம்மதியாகப் படுத்துத் தூங்கினேன்.

மறுநாள் காலை தோழர் ஹைதர்கான் வந்தார். 'புத்தகம் எப்படி இருக்கிறது' என வினவினார். நான் தோற்றுப்போய் விட்டேனாதலால் என்னை வெட்கம் பிடுங்கித் தின்றது. ஆனாலும் என் அறியாமையை ஒப்புக்கொள்ள முடியாதபடி அசட்டுக் கௌரவம் வந்து குறுக்கே நின்றது. பழியைக் கார்ல் மார்க்ஸின் தலைமேல் தூக்கிப்போட்டேன். ஏதோ விஷயத்துக்குச் சம்பந்தமில்லாத, தொடர்பில்லாத சில வார்த்தைகளை, அர்த்தமில்லாமல் அவர் உபயோகித்திருக்கிறார் என்று நான் குறை கூறினேன். தோழர் என்னை விடுபவராக இல்லை. புத்தகத்தைக் கையில் எடுத்துக்கொண்டு வாக்கியம் வாக்கியமாக வாசித்து எனக்கு நன்கு அர்த்தம் விளங்கும்படியாக விளக்கிக்கூறினார். இப்பொழுதுதான் அறியாமையில் மூழ்கினவன் நான்தான் என்றும், மார்க்ஸ் அல்லவென்றும் எனக்குப் புலப்பட்டது.

அன்று மாலை நான் தோழர் கானுடன் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தேன். அவர் "கம்யூனிஸ்ட் அறிக்கை"யிலுள்ள பகுதிகளைப் படித்துக்காட்டி மேலும் மேலும் விளக்கிக்காட்டினார். நான் அவரிடம் முதலில் முறை தவறி நடந்து கொண்டதை மன்னிக்கும்படிக் கேட்டுக் கொண்டேன். அவருடைய மாணவனாக மாறிவிட்டேன். "கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோ" என்னுடைய பிரியமான

புத்தகமாகிவிட்டது. இதற்குப்பின் எனக்கு லெனின் எழுதிய "ஏகாதிபத்தியமும் அரசாங்கமும் – புரட்சியும்" என்ற புத்தகம் கிடைத்தது. அந்தப் புத்தகம் என்னை ஆகர்ஷித்தது. இதுவரை நான், "ஏகாதிபத்தியம் ஒழிக" என்று எத்தனையோ மேடைகளிலும், ஊர்வலங்களிலும் இடிமுழக்கம் செய்துள்ளேன். ஆனால் அதன் உண்மையான அர்த்தம் இப்பொழுதுதான் எனக்குத் தெரிய வந்தது. என் அறிவுக் கண் திறந்தது இப்பொழுதுதான்.

சோவியத் ரஷ்யாவைப்பற்றியும், இன்னும் எத்தனையோ விஷயங்களைப்பற்றியும் நான் கேள்வி மேல் கேள்வி கேட்டுத் தோழரிடமிருந்து தெரிந்து கொள்வேன். விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற அவா என்னைப் பீடித்துக்கொண்டது. ஆனால் சில நாட்களுக்கு முன்வரையிலும், நான் சிறையில் உபயோகமற்ற அரட்டை அடித்துக்கொண்டு பொழுதை வீணாகக்கழித்து வந்தேன். என்னைச் சரியான பாதையில் திருப்பி, புத்தகங்களின் மேல் ஆர்வம் உண்டுபண்ணிய பெருமை தோழர் கானையேச் சேரும்.

நான் வேலூருக்கு மாற்றப்பட்டேன். கான் சேலத்திற்கு அனுப்பப்பட்டார். அக்காலத்தில் தகராறு செய்பவர்களை சேலம் ஜெயிலில்தான் போடுவார்கள். எனவே நானும் தோழர் கானுடன் சேலம் ஜெயிலுக்குப் போவதற்காக, வேலூர் போனவுடன் சிறை அதிகாரிகளுடன் வம்பு செய்தேன். அதன் பலனாகச் சேலம் ஜெயிலுக்கு மாற்றப்பட்டு மறுபடியும் தோழர் கானைச் சந்தித்தேன். சிறையைவிட்டு வெளியே வந்ததும், மதராஸிலிருந்த "தொழிலாளர் பாதுகாப்புச் சங்கத்தில்" (Labour Protection League) தோழர் சுந்தரைய்யாவுடன் சேர்ந்து, சென்னை

'மூக்குத்தூள்' தொழிலாளர் யூனியனை ஸ்தாபித்தேன். 1935-ல் காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி ஸ்தாபிக்கப்பட்டு நான் அதற்குக் காரியதரிசியாக்கப்பட்டேன்.

இந்தக் காலங்களில் நாங்கள் போடும் கூட்டங்களுக்கு 10, 15 பேர்தான் வருவார்கள். இருந்தாலும் உற்சாகம் குன்றாது நாங்கள் மணிக்கணக்காக இடிமுழக்கம் செய்வோம். பின் நான் பி. ஆரைச் சந்தித்து அவருடைய நெய் வியாபாரத்தை நிறுத்தும்படிச் செய்து, அவரைக் கட்சிக்குள் இழுத்தது. இவையெல்லாம் நேற்று நடந்ததுபோல் என் மனத்திரையில் விழுந்தன. ஜீவாவின் பிரசங்கமாரியைக் கேட்டு நான் புகழ்ந்ததும், நாங்கள் எல்லோரும் "கள்ளிறக்கும் தொழிலாளர் யூனியனை" ஸ்தாபித்து கூட்டங்களும், ஊர்வலங்களும் நடத்தியதும், தேர்தலுக்குப் பிறகு காங்கிரஸ் மந்திரிசபை ஏற்பட்டதும் என் ஞாபகத்தில் இன்னும் பச்சையாகவே இருக்கின்றன.

பி.எஸ்.ஆர். கம்யூனிஸ்டான கதை – விடுதலைப் போராட்டத்தோடு இணைந்த வீரகாவியமாகத் திகழ்கிறது!

(தலைமறைவு வாழ்க்கை பி. சீனிவாசராவ்)

வேலூர்ச் சிறையில் இ.எம்.எஸ்-ம், பி.எஸ். ஆரும்

சீனிவாசராவ் வேலூர்ச் சிறைக்கு மாற்றப்பட்டார். லெனின் எழுதிய சில ஆங்கிலப் புத்தகங்களையும் தன்னுடன் எடுத்துச் சென்றார். அங்கே அப்போது மலபார் பகுதியைச் சேர்ந்த தீவிரமான காங்கிரஸ் ஊழியர்கள் பலர் இருந்தனர். சீனிவாசராவ் அவர்கள் பலருடன் கலந்துரையாடி, லெனின் நூல்களைப் பற்றி எடுத்துக்

கூறினார். படிப்பதற்காக அந்நூல்களைக் கொடுத்தார். அவர்களில் ஒருவர் தான் இ.எம்.எஸ்.நம்பூதிரிபாத். வேலூர்ச் சிறையிலிருக்கும்பொழுதுதான் முதன் முதலாக மார்க்சிய நூல் ஒன்றைப் படித்ததாகவும், அதை பி. சீனிவாசராவ் கொடுத்தார் என்றும் இ.எம்.எஸ். பின்னாட்களில் நினைவு கூர்ந்தார்''.

"தமிழகத்தில் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தோற்றமும்-வளர்ச்சியும்''-முதல் பகுதி- என். ராமகிருஷ்ணன்.

11

ஜனசக்தி உதயம்

1934 –

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சட்ட விரோதமாக்கப் பட்டது. கம்யூனிஸ்ட் என்று யாரும் பகிரங்கமாகச் சொல்ல முடியாது. காங்கிரஸ் கட்சிக்குள்ளிருந்தும் கம்யூனிஸ்ட் என்று வெளியில் சொல்ல முடியாது.

தமிழ் நாட்டில் தோழர்கள் காட்டே, பி.எஸ்.ஆர், ஜீவா, சி.எஸ். (சுப்பிரமணியம்), ஏ.எஸ்.கே, பி. ராமமூர்த்தி, கே. முருகேசன் இன்னும் சிலர் காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியாகக் செயல்பட்டார்கள். பாண்டிச்சேரியிலிருந்து தோழர். வி. சுப்பையா சென்னையிலுள்ள இக் குழுவுடன் அடிக்கடி தொடர்பு வைத்துக் கொள்வாராம்.

1936-ல் தமிழ்நாடு சோஷலிஸ்ட் கட்சியின் முதல் மாநாடு சேலத்தில் நடைபெற்றது. குஜராத்திலிருந்து தினகர் மேத்தா கலந்து கொண்டார்.

மாநாட்டில் தோழர் ஜீவா பொதுச் செயலாளராகவும், நீலாவதி சுப்பிரமணியம், பி.எஸ்.ஆர். இருவரும் கூட்டுச் செயலாளர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி பெயரில் இயங்கி வந்த இத்தோழர்கள் தமிழ் நாட்டில் பல இடங்களுக்குச் சுற்றி

இருக்கிறார்கள். தோழர் பி.எஸ்.ஆர். முற்போக்கு அரசியல் வாதிகளோடு தொடர்புகொண்டார்.

1937-ல் ஜனசக்தி வாரப் பத்திரிகை துவங்கப்பட்டது.

"நியூ ஏஜ்" ஆங்கில மாத இதழும் ஆரம்பிக்கப்பட்டது.

தோழர் பி.எஸ்.ஆர். கண்டிப்பான பேர்வழி; கறாராக இருப்பவர். ஆகையால் அவருக்கு "ஜனசக்தி." "நியூ ஏஜ்." நிர்வாகப் பொறுப்பு கொடுக்கப்பட்டது. எவ்வளவோ சிரமத்துக்கிடையே பத்திரிகையைத் தொடர்ந்து நடத்தி வந்தார்கள்.

முதல் இதழ் வெளியாகியது. காவல் துறை விழித்துக் கொண்டது. பி.என்.கே. அச்சக உரிமையாளரை போலீஸ் பயமுறுத்தியது. அவரும் ஜனசக்தியை அச்சடிக்க மறுத்து விட்டார்.

பி.எஸ்.ஆர். துணிச்சலானவர். அச்சக உரிமையாளரை மிரட்டினார். வழக்குத் தொடரப் போவதாகக் கூறிப் பணிய வைத்தார். காவல்துறைக் கண்காணிப்பையும் மீறி மூன்று இதழ்களைக் கொண்டுவந்தார். அச்சக உரிமையாளர் – பி.எஸ்.ஆரின் மிரட்டலுக்கும், அதிகாரிகளின் அச்சுறுத்தலுக்கும் நடுவே திணறிவிட்டார். இறுதியாக ஜனசக்தியைத் தனது அச்சகத்தில் அடித்துக் கொடுக்க மறுத்து விட்டார்.

தோழர்கள் அனைவரும் பெரும் முயற்சி எடுத்துச் சொந்த அச்சகத்தை உருவாக்கினார்கள். யாரும் சந்தேகப் படாமலிருக்க அச்சகத்தின் பெயரே 'ஜேசு பிரஸ்' என்று போடப்பட்டது.

ஆட்சியாளர்களின் தாக்குதலுக்குத் தப்பிப்பதே, நித்திய கண்டம்-பூரண ஆயுசாகக் கழிந்தது.

கடந்த நாற்பதாண்டுகளாக ‘ஜனசக்தி’ உழைக்கும் மக்களின் உரிமைக் குரலாக ஒலித்து வருகிறது!

12

"ஜனசக்தி" யில் ஒரு செய்தி

தமிழ் நாட்டில் விவசாயிகள் சங்கத்தை துவக்குவதற்கு அமைப்புக் குழுவை நியமித்தார்கள். அமைப்பாளராகத் தோழர் சீனிவாசராவ் நியமிக்கப்பட்டார். ஏன் இவருக்குப் பொறுப்பு கொடுக்க வேண்டும் என்ற கேள்வி இன்னும் இருக்கிறது.

1938-ம் வருட "ஜனசக்தி" யில் ஒரு செய்தி இருந்தது.

"நாகைத் தாலுக்கா விவசாயிகள் மாநாடு, சென்னை, காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியின் காரியதரிசி தோழர். பி. சீனிவாசராவ் தலைமையில் நடைபெற்றது".

1. குறைந்த பட்சம் 5 ஏக்கர் சாகுபடி நிலம் 10 ஏக்கர் வறண்ட பூமி உடையவர்களிடமிருந்து வரி வசூலிப்பதை விலக்கிவிட வேண்டும்.

2. அநியாயமான எல்லாக் கடன்களையோ அல்லது விவசாயிக்குக் கொடுக்க சக்தியில்லாதிருக்கும் கடன்களையோ தள்ளி வைக்க வேண்டும்.

3. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய முறையை ஒழிக்க காங்கிரசுடன் பக்க பலமாயிருந்து போராட விவசாயிகள் என்றும் தயாராயிருக்கிறார்களென்று கூறுகிறோம்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இக் குறிப்புகளைத் தவிர, அக்காலத்தில் வெளியான "ஜனசக்தி" இதழ்களில் மைசூர், மான்ஸா சமஸ்தானங்களில் விவசாய மக்கள் படும் துன்பங்களையும் போராட்டங்களையும் விளக்கி எழுதியிருக்கிறார்.

இச் செய்திகள் காட்டுவதென்ன? தோழர். பி.எஸ்.ஆர். விவசாயப் பிரச்சினைகளில் ஆர்வம் கொண்டிருந்தாரென்று தெரிகிறது.

13

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தோற்றம்

தமிழ்நாடு செழிப்பான பூமி. வருடம் முழுவதும் வேளாண்மை செய்யத்தக்க வளமான மண்ணும், உழைக்கும் மக்களும் நிறைந்த நாடு.

மண் வளமிருந்தாலும், உழைக்கும் உழவர்களின் வாழ்வு முன்னேற்றம் அடையவில்லை. "உழுதவன் கணக்குப் பார்த்தால், உழவுக்குச்சி கூட மிஞ்சாது" என்பது பழமொழி.

"காடு விளைந்தென்ன மச்சான் – நம்ம
கையும் காலுந்தான மிச்சம்"-

என்ற வேதனைப் புலம்பல் வீடுதோறும் கேட்டு வருகிறோம்.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் ஐந்தில் இரு பகுதிக் கிராமங்கள் ஜமீன்தார்களுக்கும் இனாம்தார்களுக்கும் இருந்தது. மற்றும் பெரும் பகுதி நிலங்களெல்லாம் சில மிராசுதார்களுக்குச் சொந்தமாக இருந்தது.

ஜமீன்தார்களெல்லாம் வெள்ளையர்களுக்கு வெண்சாமரம் வீசி வந்தார்கள். பிரிட்டிஷ் ஆட்சியின் செல்லக் குழந்தைகளாக வாழ்ந்து வந்தார்கள். விடுதலைக்கு முன்பு, முற்போக்கு அரசியல்வாதிகளெல்லாம் ஜமீன்தார்களை – "கோவில் காளைகள்" என்றும் "ஜரிகைத்

தொப்பிக்காரர்"களென்றும் கூட்டங்களில் கண்டித்துப் பேசுவார்கள்.

அந்நிய ஆட்சியை எதிர்த்துப் போராட நாடெங்கும் பரவிக்கிடக்கும் விவசாயிகளைத் திரட்ட வேண்டுமென்று தேசிய இயக்கத்திலும் கருத்து உருவாகியது.

லக்னோவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் மகாசபை மாநாட்டின் போது, காங்கிரஸ் இடது சாரிகள் அனைவரும் கூடினார்கள்.

1936 ஏப்ரல் 11

அகில இந்திய விவசாயிகள் சங்கம் (கிசான் சபா) என்ற அமைப்பை ஏற்படுத்தினார்கள்.

விவசாயிகள் இயக்க வரலாற்றில் இது முக்கியமான நாளாகும்.

இக் கூட்டத்தில் தமிழ் நாட்டிலிருந்து பி.எஸ்.ஆரும் ஜீவாவும் கலந்து கொண்டார்கள்.

தமிழ் நாட்டில் ஜமீன் ஒழிப்பு மாநாடுகளும், ரயத்துக்கள் மாநாடுகளும், லேவாதேவி ஒழிப்பு மாநாடுகளும் நடந்தன. இம் மாநாடுகளில் ஜீவாவும், சீனிவாசராவும் கலந்து கொள்வார்கள். மாநாடுகளாக நடந்தனவே தவிர உழைக்கும் விவசாயிகளின் சங்க அமைப்பாக உருவாகவில்லை.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதலாவது மாநாடு 1943 மே 23-ஜூன் 1-ல் பம்பாயில் நடைபெற்றது.

நாடெங்கும் உழைக்கும் விவசாயிகளைக் "கிசான் சபா" அமைப்புக்குள் திரட்ட வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது.

கட்சி காங்கிரஸ் முடிவுப்படி, தமிழ் நாட்டிலும், சில இடங்களில் விவசாயிகள் சங்கம் அமைக்கும் வேலை துவங்கியது. இராமநாதபுரம் மாவட்டத்தில் தோழர். எம்.வி. சுந்தரம் 'கட்டனூர்' கிராமத்தில் வாரப் பிரச்சினையில் விவசாயிகளைச் சங்கத்தில் திரட்டினார்.

தஞ்சை மாவட்டத்தில் களப்பால்,தென்பரைக் கிராமங்களைச் சுற்றிலும் தோழர்கள் அமிர்தலிங்கம், இராமானுஜம் இன்னும் சில தோழர்கள் முன் முயற்சியில் விவசாயிகளைத் திரட்டினார்கள்; போராட்டம் நடத்தி வெற்றியும் கண்டார்கள். சேலம் மாவட்டம் காவேரிப் பட்டினத்தில் டாக்டர் அண்ணாஜி விவசாயிகள் சங்கத்தை ஆரம்பித்தார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக் குழு கூடியது. விவசாய அரங்க வேலைக்கு யாரைப் பொறுப்பாக நியமிக்கலாமென்று விவாதம் நடத்தப்பட்டது.

விவசாயப் பிரச்சினைகளைப் பற்றி ஆய்வு செய்த இரு புத்தகங்களைப்பற்றித் தோழர் சி.எஸ். தெரிவித்திருக்கிறார். டாக்டர் பி.சி . நாராயணசாமி நாயுடு, திரு.சத்தியநாதன் இருவரும் எழுதிய "கிராமப் பொருளாதாரம்" என்ற நூல்களே தமிழ் நாட்டில் விவசாயப் பிரச்சினைகளைப் பற்றிப் புரிந்து கொள்ள உதவியாக இருந்தன.

கிராமங்களில் சுற்றித் திரிந்து முற்போக்கு அரசியல் பிரச்சாரம் செய்து வந்த சோஷலிச தேசியவாதிகள் மூவர். ஜீவா, சீனிவாசராவ், பி. ராமமூர்த்தி.

தோழர் ஜீவா - தொழிற் சங்கங்களில் பொறுப்பும், பத்திரிகைப் பொறுப்பும் கொடுக்கப்பட்டது. தமிழ் ஆர்வத்தோடு, இலக்கிய ஈடுபாடும் கொண்டிருந்தார்.

பி.ஆர். - அரசியல் பிரச்சாரத்தோடு, தொழிற் சங்கங்களில் அதிக ஈடுபாடும் கொண்டார்.

எம். கல்யாணசுந்தரம் - ரயில்வே தொழிலாளர்கள் இயக்கத்தில் பணியாற்றி வந்தார்.

கிராமப்புறங்களில் இயக்கத்தைக் கட்ட வேண்டும். யாருக்குப் பொறுப்பு கொடுப்பது?

கிராமங்களில் சுற்றித் திரிய வேண்டும்.

சாதிச் சமயப் பழக்க வழக்கங்களில் பின்தங்கிக் கிடக்கும் மக்களிடையே-அசூயை இல்லாமல் அவர்களோடு அவர்களாகக் கிடந்து பழக வேண்டும்.

சண்டை சச்சரவுகள் வந்தாலும் நின்று சமாளிக்க வேண்டும்.

உடலுறுதியும் உள்ளத்திடனும் இருக்க வேண்டும்.

பராபட்சமில்லாமல் ஒரஞ்சாயாமல் விவகாரம் பேச வேண்டும்.

இவ்வளவு நிரடான "கிசான்" விவசாய அரங்க வேலைக்குத் தோழர் பி. சீனிவாசராவ்தான் பொறுப்பு என்று தீர்மானிக்கப்பட்டது.

14-6-1943

தமிழ்நாடு விவசாயிகள் சங்க ஆர்கனைசிங் கமிட்டி (அமைப்புக் குழு) அமைக்கப்பட்டது. பி. சீனிவாசராவ், காரியதரிசி.

விவசாயிகள் சங்க மாகாண ஆர்கனைசிங் கமிட்டி.

நெ. 1-6, டேவிட்ஸன் தெரு, சென்னை.

உறுப்பினர்கள்:

ஆர்.கே. பாண்டுரங்கம், விவசாயிகள் சங்கம், காவேரிப்பட்டினம்.

மோஹன்ரங்கம், விவசாயிகள் சங்கம்.

ஆர். அமிர்தலிங்கம், தென்பரை.

தொண்டர் மாணிக்கம், திருப்பத்தூர்.

சீனிவாசராவ் தனக்குக் கொடுத்த பொறுப்பைக் கொள்கைப் பிடிப்போடு நிறைவேற்றிக் காட்டினார்.

தமிழக வேளாண்மை விவரங்கள் அதிகம் தெரிந்தவரல்ல; விடுதலைப் போராட்ட வேள்வியில் உடலை அர்ப்பணம் செய்திருந்தாலும், விவசாயத்தில் நேரடியாக உழைத்தவரல்ல.

தமிழில் தேர்ச்சி பெற்றவரல்ல; வட்டாரப் பேச்சு மொழிகளையும் அதிகமாகத் தெரிந்தவரல்ல. ஆனால், உழவர்களின் வாழ்க்கையை,அவர்களோடு இரண்டறக் கலந்து புரிந்துகொண்டார். மார்க்சிய ஞானத்தால் உழவர்களைத் திரட்டவும், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் தேர்ச்சிபெற்றார்.

"Learn from the Masses and Lead to the Masses"– Lenin.

மார்க்சிய ஞான அறிவைப் பயன்படுத்தி- "மக்களிடையே சென்று படி-மக்களுக்கு வழிகாட்டு!" என்றார் மேதை லெனின். லெனின் மணிவாசகங்களைத்

தோழர் பி.எஸ்.ஆர்-வழிகாட்டும் கட்டளையாகக் கொண்டு இயங்கினார்.

உழவர்களின் உளம் நிறைந்த தலைவரானார்!

விவசாயிகள் சங்க அமைப்புக் குழுக் கூட்டம் செப்டம்பர் 18-19 தேதிகளில் சென்னையில் நடந்தது.

அமைப்புக் குழுச் செயலாளர் சீனிவாசராவ் தலைமையில் கூடியது.

ஜம்புநாத் கௌசிக்
(தென்னாற்காடு மாவட்டம்)

எ. மோகனரங்கம்
(வட ஆற்காடு மாவட்டம்)

தொண்டர் மாணிக்கம்.
(திருப்பத்தூர், இராமநாதபுரம் மாவட்டம்)

ஆர். அமிர்தலிங்கம் (தஞ்சை மாவட்டம்)

மிஸஸ் லலிதா, (கிருஷ்ணகிரி மாவட்டம்)

அண்ணாஜி (கிருஷ்ணகிரி மாவட்டம்)

அமைப்புக் குழு தேர்ந்தெடுக்கப்பட்ட இரு மாதங்களுக்குள் சில மாவட்டங்களில் 19 இடங்களில் கிளைச் சங்கங்கள் அமைக்கப்பட்டுவிட்டன.

எடுத்த முடிவை நிறைவேற்றுவதில் ஆர்வத்தோடும், செயல் திறனோடும் ஈடுபட்டிருக்கிறார்கள். விவசாயிகள் இயக்கத்தின் முன்னோடிகளின் உழைப்பு — என்றென்றும் முன்னுதாரணமாகத் திகழும்!

14

கொத்தடிமைக் கோட்டைக்குள் செங்கொடி

நிலப் பிரபுத்துவக் கோட்டை – தஞ்சை மாவட்டம். காவிரியாற்றின் படுகை நிலங்களெல்லாம், சில மிராசுதார்களுக்கே சொந்தம். மிராசுதார்கள் வைத்ததே சட்டம்.

கோட்டைக்குள்ளேயே செங்கொடி புகுந்துவிட்டது.

விவசாயிகள் சங்கம் – தஞ்சை மாவட்டம் தென்பரையில் துவக்கப்பட்டது. ஹைதராபாத்திலுள்ள உத்திராபதி மடத்துக்கு ஏராளமான நிலம் சொந்தம். இந்த நிலத்தைப் பயிர் வைத்த விவசாயிகளைச் சங்கத்தில் திரட்டினார்கள். சுற்றுக் கிராமங்களிலும் பரவியது.

செங்கொடி பிடித்து விவசாயிகள் திரளுவதைக் கண்டு மிராசுதார்கள் மிரண்டார்கள்.

சங்கக்கூட்டம் என்றால் உடனே மிராசுதார் ஏதாவது வேலை என்று கூறி, கூட்டத்துக்குப்போகவிடாமல் தடுத்துவிடுவார். அதற்காக அமாவாசையில்தான் அதிகமாகச் சங்கக்கூட்டம் நடைபெறும். இன்னும் அமாவாசைக் கூட்டம் என்றுதான் சொல்லுவார்கள்.

பகலில் கூடினால் மிராசுதாருக்குத் தெரிந்துவிடும் என்ற பயத்தில் இருட்டில்தான் கூடுவார்கள். அப்படியும் அடியாட்களை ஏவி, கூட்டத்தைக் கலைக்கச் செய்வார்கள்.

விவசாயிகள் உறுதியாக நின்று போராடினார்கள். மிராசுதார்கள் பணிவதைத் தவிர வேறு வழியில்லை என்று தெரிந்த பின்னர்தான் சிலர் சமரசத்துக்கு வந்தார்கள்.

1944-ல் களப்பாலில் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது.

விவசாயிகள் தரப்பில் களப்பால் குப்புசாமி, அமிர்தலிங்கம், ராஜகோபால்.

மிராசுதார்கள் தரப்பில் வி. எஸ். தியாகராஜ முதலியார், திருக்களார் மடாதிபதி.

ஒப்பந்தம்: பண்ணையாட்களைச் சாட்டை அடி, சாணிப்பால் கொடுமை செய்வதை மிராசுதார்கள் நிறுத்த வேண்டும்.

முத்திரை மரக்காலில் நெல் அளக்க வேண்டும்.

இந்த ஒப்பந்தம் உழவர்களுக்குப் பெரும் ஊக்கத்தைக் கொடுத்தது.

கிளர்ச்சி வலுத்தது. எங்கும் பரவியது. குன்னியூரார் கோட்டைக்குள்ளும் புகுந்தது. 80 பண்ணையாட்களை வேலையை விட்டு நீக்கினார் குன்னியூர்ப் பண்ணை சாம்பசிவ அய்யர்.

போராட்டம் தீவிரமாகியது. மீண்டும் ஒப்பந்தம் மன்னார்குடியில் ஏற்பட்டது.

சாகுபடி வேலைக்கு

ஆணுக்கு $^1/2$ மரக்காலிலிருந்து $^3/4$ மரக்கால்

பெண்ணுக்கு $^1/4$ மரக்காலிலிருந்து $^1/2$ மரக்கால் என்றும் கூலி உயர்வு கிடைத்தது.

அறுவடையில்,

சாகுபடி செய்தவர்களுக்குக் கண்டு முதலில்
கலத்துக்கு 2 மரக்கால்

சாகுபடி வேலை செய்யாதவர்களுக்குக் கண்டு
முதலில் கலத்துக்கு 1 மரக்கால் நெல்

என்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

இரு ஒப்பந்தங்களும்- ஏற்பட்ட பின்னர்- விவசாயிகள் சங்கம் தஞ்சை மாவட்டம் முழுவதும் காட்டுத் தீயாகப் பரவியது!

இந்த இரு ஒப்பந்தங்களும் முப்பதாண்டுகளுக்கு முன்பிருந்த நிலையை அப்பட்டமாக எடுத்துக் காட்டுகின்றன. இன்றைய நிலைமையை மாற்றுவதற்காக எத்தனை கொடிய அடக்கு முறைகளை எதிர்த்து நெருப்பாற்றில் நீந்தி-விவசாயிகள் இயக்கம் வளர்ந்து வந்திருக்கிறது என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

15

மன்னார்குடியில் முதல் மாநாடு

நிலப் பிரபுத்துவப்பிடிப்புள்ள மன்னார்குடியிலேயே தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் முதல் மாநாட்டை நடத்துவதென்று முடிவு செய்தார்கள்.

மாநாட்டைச் சிறப்பாக நடத்தி முடிக்க பி.எஸ்.ஆர். வரவேற்புக் குழுவை அமைத்தார். ஏப்ரல் மாதம் முழுதும் தஞ்சை மாவட்டத்தில் ஊர் ஊராகச் சென்று பிரச்சாரக் கூட்டங்கள் நடத்தினார். நடக்கும் வேலைகளைப் பற்றிய குறிப்புகளை அவ்வப்போது ஜனசக்தி வார இதழில் வெளியிடச் செய்தார்.

மாநாட்டுக்கு நன்கொடையாகக் கொடுத்து வரும் நெல் காணிக்கை விவரங்களை எழுதுவார். விவசாயத் தொழிலாளிகளின் வாழ்க்கைகளையும் சேர்த்து எழுதுவார்.

நான் சென்ற கிராமங்களிலொன்றில் ஒரு மிராசுதாரின் ஏஜண்டைப் பார்த்தேன். அவரிடம் இரண்டு சவுக்குகள் இருந்தன. நான் கேட்பதற்கு முன்பே அவர் முந்திக்கொண்டு "அடியாத மாடு பணியாது சார்! இந்தப் பசங்களை அடிக்காவிட்டா ஒரு வேலை செய்வாங்கோண்ணு நினைக்கிறீங்களா?" என்று கேட்டார். நான் தனியாக அவரிடம் வேலை செய்யும்

விவசாயிகளைப் பார்த்து விசாரித்தேன். “இந்த ஆண்டை ரொம்ப நல்லவரு. தினம் அடிக்க மாட்டாரு” என்று கூறினார்கள்.

கிராமங்களைச் சுற்றி வந்ததால், பி.எஸ்.ஆருக்கு நேரடி அனுபவங்களும் கிடைத்தது. வாழ்க்கை முறைகளை மக்களிடமிருந்து படித்துக்கொண்டார்.

1944 மே மாதம் 3ந் தேதி

மாநாடு சிறப்பாக நடந்தது. பல்லாயிரக் கணக்கில் விவசாயிக்ள் திரண்டு வந்தார்கள். திருவிழாக் கோலமாகக் காட்சியளித்தது. மகாராஷ்டிரத்திலிருந்து பருலேக்கர் வந்திருந்தார். தோழர். ஆர்.கே. கண்ணன் கொடியேற்றினார். தோழர். எம். கல்யாணசுந்தரம் ரயில்வே தொழிலாளர் சார்பில் வாழ்த்துரை நல்கினார்.

தலைவர்களின் வீர முழக்கங்களுக்குப் பின்னர் கலை நிகழ்ச்சியும் விடிய விடிய நடந்தது!

மன்னார்குடி மாநாடு-மிராசுதார்களுக்கு
ஓர் எச்சரிக்கை

தமிழ்நாடு முழுதுமுள்ள விவசாயிகளுக்கு
ஒரு விடிவெள்ளி!

மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய நிர்வாகிகள் பட்டியலை – மூன்று மாதங்களுக்கு முன்பே–26-2-1944-ல் வட ஆற்காடு மாவட்டம் செங்கத்தில் கூடிய அமைப்புக் குழு கூட்டத்தில் தயாரித்துவிட்டார்கள்.

மாநாட்டிலும் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பி. சீனிவாசராவ் – தலைவர்

மணலி சி. கந்தசாமி – பொதுக் காரியதரிசி

லலிதா அண்ணாஜி – உதவிக் காரியதரிசி

அங்கத்தினர்கள்:

தெய்வசிகாமணி

ஜம்புனாத் கௌசிக் (திருவெண்ணெய்நல்லூர்)

எம்.ஆர். பாண்டுரங்கம் (தென்னாற்காடு)

ஏ. சுப்பையா(சுப்பிரமணியபுரம் –
(திருநெல்வேலி ஜில்லா)

எஸ். ராமசுப்பு (ராமநாதபுரம் ஜில்லா)

எஸ். முத்து – (திருநெல்வேலி ஜில்லா)

சங்கமரெட்டி (ராமநாதபுரம் ஜில்லா)

அமிர்தலிங்கம் (மன்னார்குடி)

ஆர். ராமசாமி (வட ஆற்காடு ஜில்லா)

மோஹனரங்கம் (சாத்தனூர்)

கீழ்க்கண்டவர்கள் அகில இந்திய கிசான் கவுன்சில் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

பி. சீனிவாசராவ்

லலிதா அண்ணாஜி

மோஹனரங்கம்

ஏ. சுப்பையா

சி. கந்தசாமி

ஜம்புனாத் கௌசிக்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் முதல் மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்—ஓய்வு ஒழிச்சலின்றிக் கிராமங்களில் சங்கக் கிளைகளை நிறுவப் பெரும் முயற்சி எடுத்துவந்தார்கள்,

"காரிருள் போக்கியதே -- கிசான் சபா" என்று ஊரெல்லாம் நம்பிக்கையூட்டும் வகையில் சங்கப்பணி துவங்கியது!

16

ஊழியர்களை உருவாக்கினார்

மன்னார்குடி மாநாட்டு முடிவுகளை அமுலாக்க பி.எஸ்.ஆர். பம்பரமாகச் சுற்றினார்.

மாவட்டங்கள் தோறும் நேரில் சென்று அமைப்புகளை உருவாக்கினார். யார், யாருக்கு என்ன பொறுப்புக்களைக் கொடுக்கலாமென்று முடிவெடுத்தார்.

மே மாதம் மூன்றாம் நாள் மன்னார்குடி மாநாடு மே மாத இறுதிக்குள்ளாகவே பல மாவட்டங்களில் சங்கப் பொறுப்பாளர்களை நேரில் சென்று நியமித்தார்.

10-5-1944 – மதுரை ஜில்லா ஆர்கனைசிங் கமிட்டி அமைப்புக் கூட்டம் திண்டுக்கல்லில் நடந்தது.

பி. சீனிவாசராவ் தலைமை வகித்தார். மதுரை மாவட்ட விவசாயிகள் சங்க அமைப்புக் குழுவுக்கு:

தலைவர்: நாகராஜ ஐயர் (சத்திரப்பட்டி)

காரியதரிசி: K.V. ஸ்ரீராம் (திண்டுக்கல்)

பொக்கிஷதார்: வி. மதனகோபால் (எரியோடு)

கமிட்டி அங்கத்தினர்கள் ஆறுபேர்.

சங்கத்துக்கு 9250 அங்கத்தினர் சேர்க்கத் திட்டம்.

17-5-1944 – இராமநாதபுரம் மாவட்ட விவசாய ஊழியர்கள் கூட்டம் மதுரையில் கூடியது. பி.எஸ்.ஆர். தலைமை வகித்தார். விவசாயிகள் சங்க ஜில்லாக் கமிட்டி அமைக்கப்பட்டது.

ஸ்ரீ எஸ். எஸ். சங்கமரெட்டியார் தலைவராகவும், ஆலமரத்துப்பட்டி ஜி. ராமச்சந்திரன் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சிவகங்கை ஜமீன் ஏரியாவில் 1353-ம் பசலியில் மழை பெய்யவில்லை. 50 சதவீதம் வரிவஜா வேண்டுமென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

25-5-1944 திருநெல்வேலி ஜில்லா விவசாய சங்கப் பிரதிநிதிகள் கூட்டம் விஸ்வநாதப் பேரியில் பி. சீனிவாசராவ் தலைமையில் நடந்தது.

தோழர். பார்த்தசாரதியைத் தலைவராகவும் ஆர்.ஜி. கிருஷ்ணனைக் காரியதரிசியாகவும் கொண்ட கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது.

27-5-1944-ல் திருச்சி மாவட்ட விவசாயிகள் சங்க ஆர்கனைசிங் கமிட்டி அமைக்கப்பட்டது. தோழர். பி.எஸ்.ஆர். கலந்து கொண்டார்.

25-6-1944 - தென்னாற்காடு மாவட்ட விவசாயிகள் சங்கம்-தூக்கணாம்பாக்கத்தில் அமைக்கப்பட்டது. தோழர். சீனிவாசராவும் கலந்து கொண்ட ஊழியர் கூட்டமும் பொதுக் கூட்டமும் நடந்தன.

வட ஆற்காடு மாவட்ட விவசாயிகள் சங்க அமைப்புக் கூட்டம் மாநாட்டுக்கு முன்பே தோழர் சீனிவாசராவ்

தலைமையில் நடைபெற்றது. உஷ்மான் காரியதரிசியாகவும், கோபால்ரெட்டியார் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

தென்பரையில் உதயமான விவசாயிகள் சங்கத்தை – தமிழ் நாடெங்கும் பரப்பியவர் பி.எஸ்.ஆர்.

புதிய உலகம் காணுவதற்கு–உரிய அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டுமென்பதை உறுதியாகக் கொண்டு செயல்பட்டார். மாநிலச் சங்கம், மாவட்டச் சங்கம், கிளைச் சங்கம் – எல்லா மட்டங்களிலும் சங்கத்தை ஜனநாயக முறைப்படி செயலாற்ற வேண்டுமென்று ஊழியர்களுக்குக் கற்றுக்கொடுத்தார்.

"விவசாயிகள் சங்க விதிமுறைகள்" என்ற நூலை வெளியிட்டார்.

விவசாயிகள் சங்கத்தைக் கட்டுவது எப்படி என்று விளக்கிக் கூறியிருக்கிறார்.

தமிழ் நாடெங்கும் விழுது போல் விரிந்து பரந்து கிடக்கும் விவசாயிகள் இயக்கத்துக்கு வித்திட்டவர் தோழர். பி. சீனிவாசராவ்! கட்டி வளர்த்தவர் தோழர் பி.எஸ்.ஆர்.

17

அடியாட்களை எதிர்த்து

சங்கம்!

செங்கொடி!

காம்ரேட்!

மூன்று சொற்களும் மந்திரச் சக்தி போல மக்களிடையே வேகமாகப் பரவியது. படிப்பு வாசனை தெரியாத விவசாயிகள் – பள்ளிக்கூடம் பக்கமே ஒதுங்காதவர்களும் இவ்வார்த்தைகளைச் சாதாரணமாகச் சொல்லுவார்கள்!

சூரியனைக் கண்ட ஜீவராசிகளைப் போல அடிமைச் சங்கிலியை அறுத்தெறிய வந்த செங்கொடி நிழலில், பண்ணையாட்கள் ஆயிரம் ஆயிரமாகத் திரண்டார்கள்.

குன்னியூர்ப்பண்ணைக் கிராமம் –அய்யனார் கோவில். இங்கு விவசாயிகள் சங்கக்கூட்டம் நடந்தது.

கடல் அலையை அடக்க வந்தான் கனியூட் மன்னன். சங்கம் பரவுவதைத் தடுக்க முனைந்தார் குன்னியூரார்!

செங்கொடிச் சங்கக் கூட்டத்துக்கு யாரும் போகக் கூடாதென்று தண்டோரா போட உத்தரவாகியது!

பண்ணை உத்தரவை மீறியும் மக்கள் திரண்டு வந்தார்கள். கூட்டமாகத் திரண்டாலும், ஒவ்வொருவருக்கும் —உள்ளத்திலே பயம் குடிகொண்டிருந்தது. சங்கம் நீடிக்குமா? என்ன ஆகுமோ? என்ற ஐயத்தோடு கூட்டத்துக்கு வந்தார்கள்!

கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது. அடியாட்கள் வருகிறார்கள். குடிகார ஏச்சுக்களோடு கூட்டத்தை நெருங்கி வந்துவிட்டனர்.

தங்களை யாரென்று மிராசுதார்களுக்கு இனம் சொல்லிவிடக்கூடாதென்ற பயத்தில் கூட்டத்திலிருந்து தனித்தனியாக ஒதுங்கி நழுவ ஆரம்பித்துவிட்டனர்.

சீனிவாசராவ் மட்டும் சிங்கம்போலக் கர்ஜிக்கிறார். நெருங்கினால் சுடுவேன் என்று எச்சரிக்கிறார். டிரவுசர் பாக்கெட்டில் கையைத் திணித்தவண்ணம் மிரட்டிக் கொண்டிருக்கிறார்.

அரைமணி நேரத்துக்கு மேலாக ஏச்சும் மிரட்டலும் நடக்கிறது.

கூட்டம் தாக்கப்படுவதாகச் செய்தி பரவியது. நொடிப்பொழுதில் உழவர் பெரும் கூட்டம் ஆவேசமாகக் கிளம்பி வந்தது; படைபடையாகக் குவிந்துவிட்டார்கள்.

கையில் கிடைத்ததெல்லாம் உழவர்களுக்கு ஆயுதந்தான். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். உழவர் பெரும் படையைக் கண்ட அடியாட்கள் திணறினார்கள் கூலிப்பட்டாளத்தின் குடிவெறியும் மட்டார்ந்தது. இனித் தப்ப முடியாதென்ற நிலை வந்ததும் சுயநினைவு வந்தது.

பி.எஸ்.ஆரை நோக்கி வெள்ளைத் துணியைக் காட்டி-சமரசத்துக்கு வந்துவிட்டார்கள்.

குன்னியூர் மிராசுதார் தங்களை எவ்வாறு அடியாட்களாகத் தயாரித்தார்கள் என்ற விவரத்தை எடுத்துக் கூறினார்கள்.

உழவர் படைத் தளபதி சீனிவாசராவ், அடியாட்களுக்குப் புத்திமதிகளைச் சொல்லி அனுப்பி வைத்தார்.

சி.ஐ.டி.களையும் வேலை வாங்குவார். 1940-48 ஆண்டுகளில் உளவு இலக்கா-சி.ஐ.டி. அவரைத் தொடர்ந்து செல்வார். எங்குச் சென்றாலும் அரசியல்வாதிகளைப் பின்பற்றிச் செல்வதால் இவர்களை (Shadow) நிழல் என்று சொல்வார்கள்.

சீனிவாசராவ் தனது படுக்கையைத் தூக்கச் சொல்லி விடுவார். சி.ஐ.டி. தூக்குவார்.

பிரயாணத்தில் கூட்டம் அதிகமாக இருந்தால் இடம் ஒதுக்கித்தரக் கட்டளையிடுவார். டிக்கெட் எடுக்குமாறு பணத்தைக் கொடுப்பார்.

நிழலாகச் சுற்றி வரும் சி.ஐ.டி. - தோழர் சீனிவாசராவ் சொன்ன வேலைகளைத் தட்டாமல் செய்துவிடுவார்.

இதைப்போல் இன்னொரு சம்பவம். தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மூன்றாவது மாநாடு வத்திராயிருப்பில் நடந்தது.

இரண்டாவது நாளில் உழவர் பேரணி. மேலப்பாளையம் என்ற மறவர் தெருவைக் கடந்து, ஊர்வலம் அக்ரகாரத்தில் நுழைகிறது.

போலீஸ் அதிகாரி—இன்ஸ்பெக்டர் பிராமணர் தெருவில் நுழையக் கூடாதென்று தடுத்தார்.

சீனிவாசராவ் பார்த்தார். சாவதானமாகச் சொன்னார். அதிகாரி கேட்கவில்லை. வேங்கை போல வெகுண்டெழுந்தார். சிம்மக்குரலில் கர்ஜித்தார். கால் பூட்ஸைக் கழற்றிவிட்டார். தலைவரின் கோபாவேசத்தைக் கண்ட விவசாயிகளும் சாடினார்கள். அதிகாரி தப்ப முடியுமா? இறுதியில் போலீஸ் அதிகாரி பணிந்தார்.

இதுபோல் எத்தனையோ சம்பவங்கள். 1946-ல் தலைமறைவாக இருந்தார். தலைமறைவு வாழ்க்கை அனுபவங்களைச் சுவையோடு எழுதியிருக்கிறார்!

1946 பிப்ரவரியில் தென் இந்திய இரயில்வே தொழிலாளர் போராட்டம் தமிழகத்தையே குலுக்கியது. தோழர். எம். கல்யாணசுந்தரம் அவர்களைத் தலைவராகக் கொண்ட தொழிற்சங்கமே இப்போராட்டத்தை நடத்தியது.

தோழர். பி.எஸ்.ஆர்-திருச்சிக்குச் சென்றார். கட்சி அலுவலகத்தில் தங்கியிருந்தபோது கைது செய்யப்பட்டார்.

போலீஸ் லாக்கப்பில் இவரையும் சேர்த்து இருபதுபேரைத் தள்ளி அடைத்தபோது எதிர்த்து வாதாடினார். இதே லாக்கப்பில் – வெள்ளையராட்சியில் எட்டு பேரைத்தான் அடைத்தார்கள். காங்கிரஸ்

அமைச்சரவை ஆட்சி நடத்தும்போது இருபது பேரைத் தள்ளி அடைப்பது என்ன நியாயம்? என்று வற்புறுத்தினார்.

அதிகார வர்க்கத்தையும், அவர்களின் அடியாட்களையும் சீனிவாசராவ் அடியோடு வெறுப்பார்! சரியான பாடத்தைக் கற்பிக்க வேண்டுமென்பார்!

18

சூடான பதிலடி

சீனிவாசராவ் தமிழ் நாட்டு அரசியலில் ஈடுபாடு கொள்வதற்கு மொழி ஒரு தடையாக் இல்லை.

மக்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டதால், நீக்குவதற்கான வழிவகைகளைக் கூறும்போது பி.எஸ்.ஆரின் பேச்சை விவசாயிகள் புரிந்து கொள்ள முடிகிறது.

"மழலைத்திரு மொழியில்சில வடுகுஞ்சில தமிழும்
சூழறித்தரு கருநாடியர்!"

என்று கலிங்கத்துப் பரணியில் ஜெயங்கொண்டார் பாடியிருக்கிறார். பி.எஸ்.ஆர். இதைப்போலக் கலப்பு மொழியில் பேசினாலும், தஞ்சை மாவட்ட விவசாயத் தொழிலாளிகளின் உள்ளத்தைத் தொட முடிந்தது.

"ஜனசக்தி"யில் பல கட்டுரைகள் எழுதி இருக்கிறார். விவசாயிகள் பிரச்சினைகளை விளக்கி இருபதுக்குமேல் சிறுநூல்களை எழுதியிருக்கிறார்.

விவசாயிகள் போராட்டம் வெடித்தது. தலைமை தாங்கிய அமிர்தலிங்கம், மணலி இருவரையும் மாவட்டத்தைவிட்டு வெளியேற்ற அரசு உத்தரவிட்டது.

அப்போது "தஞ்சையில் நடப்பதென்ன?" என்ற நூலை எழுதினார். மிராசுதார்களின் கொடுமையையும் தாழ்த்தப்பட்ட மக்களின் இழிவு நிலையையும் விளக்கிக் கூறியிருக்கிறார். அடிமைத்தனத்தை எதிர்ப்பது குற்றமா? என்று ஆட்சியாளர்களுக்குப் பதிலடி கொடுத்து எழுதினார்.

பிரிட்டிஷ் ஆட்சியிலும், காங்கிரஸ் ஆட்சியிலும் மாநிலத்தில் நிறைவேற்றிய ஜமீன் ஒழிப்பு, இனாம் ஒழிப்புச் சட்டங்களைப் படித்து உடனுக்குடன் அதன் குறைபாடுகளை விளக்கிக்கட்டுரைகள் எழுதினார். சிறு பிரசுரங்களாகவும் வெளியிடுவார். இவை விவசாயச் சங்க ஊழியர்களுக்கு உதவியாக இருக்கும்.

1937-ல் "தினமணி" தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வந்தார்கள். ஆசிரியர் டி.எஸ். சொக்கலிங்கம் ஊழியர்களைப் பழி வாங்கினார். போராட்டம் நீடித்தது.

நிர்வாகிகள் கருங்காலிகளை வேலைக்கு அமர்த்தினார்கள். கருங்காலிகள் வேலைக்குச் செல்வதை எதிர்த்து, ஊழியர்கள் அமைதியாகப் படுத்து மறியல் செய்தார்கள்.

டி.எஸ். சொக்கலிங்கம் தேசபக்தராக இருந்தாலும், ஈவு இரக்கமில்லாமல் ஊழியர்களை மிதித்துத் தாண்டிச் சென்றார். இக்கொடிய சம்பவத்தைப் படம் பிடித்து "ஜனசக்தி"யில் பிரசுரம் செய்தார் பி.எஸ்.ஆர்.

"ஜனசக்தி"யை எதிர்த்து "சோசுக்கள்" அதாவது சோஷலிஸ்டுகளைத்தான் "சோசுக்கள்" என்று கீழ்த்தரமாகக் சொக்கலிங்கம் எழுதினார்.

தோழர். பி.எஸ்.ஆர் எதிரிகள் இழிவுபடுத்துவதைத் தாங்காதவர். சூட்டுக்குப் பதில் சூடு கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்தார்.

"தினமணிச் சொக்கனின் கதை" என்று ஜனசக்தியில் எழுதினார். இடதுசாரி அரசியல்வாதிகளை இழிவுபடுத்தியதை எதிர்த்துச் சொக்கலிங்கத்தின் தனி வாழ்க்கை ரகசியங்களை அம்பலப்படுத்தினார்.

தனி வாழ்க்கையெல்லாம் அரசியலுக்கு இழுக்கலாமா? இது அரசியலாகுமா? என்று கேட்டவர்களுக்கு-

கம்யூனிஸ்டுகள் என்ன கிள்ளுக்கீரையா? உண்மை உழைப்பாளிகள் மீது அவதூறு செய்வோரின் வண்டவாளங்களை மக்களுக்கு அம்பலப்படுத்துவதில் தவறில்லை என்று பதிலடி கொடுத்தாராம்.

விவசாயிகள் பிரச்சினைகளை விளக்குவதற்கெனத் தனிப் பத்திரிகை வேண்டுமென்று கருதினார்.

1953 செப்டம்பர் 15-ல் "உழவன் குரல்" மாதம் இருமுறையாக வெளியிடப்பட்டது.

தியாகி களப்பால் குப்புசாமியின் வரலாற்றை எழுதினார். அதில் திருச்சிச் சிறையில் விஷம் கொடுத்துக் கொல்லப்பட்டதைக் குறிப்பிட்டு எழுதினார்.

நாணலூர் சீனிவாச ஐயங்காரும், கன்னியூர் சாம்பசிவ அய்யரும் நேரடியாகச் சிறை அதிகாரிகளைச் சந்தித்து விஷம் கொடுக்கச் செய்ததாக எழுதியிருந்தார்.

இக்கட்டுரையில் எழுதப்பட்டதை எதிர்த்துக் குன்னியூர் சாம்பசிவ அய்யர் வழக்கு தொடர்ந்தார்.

ஏழைகள் சொல் அம்பலம் ஏறுமா? நீதி மன்றங்களில் வசதிக்காரர்களின்மீது குற்றத்தை நிரூபிக்க முடியுமா? தண்டனை கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாதல்லவா!

'உழவன் குரல்' பத்திரிகையைத் தொடர்ந்து நடத்தி வந்தார். கம்யூனிஸ்ட் கட்சியின் சிறந்த எழுத்தாளர்கள் ஆர்.கே.கண்ணன், ஆளவந்தார் போன்றவர்கள் விவசாயிகளுக்குப் புரியுமாறு எளிய நடையில் எழுதி வந்தார்கள்.

விவசாயிகள் சங்கத்தின் உற்ற துணைவனாக "உழவன் குரல்" ஓராண்டு நடந்து வந்தது.

"உழவன் குரல்" ஆற்றிவந்த பணியைத் தொடர்ந்து நிறைவேற்றும் குறிக்கோளோடு "உழவுச் செல்வம்" நடந்து வருகிறது. "உழவன் குரல்" என்ற பெயரிலேயே வெளியிட முயற்சி எடுக்கப்பட்டது. பதிவு அனுமதி கிடைக்காததால், "உழவுச் செல்வம்" என்று நடத்தி வருகிறோம்.

19

கலைத்தொண்டு

சீனிவாசராவுக்கும் கலைக்கும் என்ன உறவு இருக்க முடியும்? என்று கேட்கத் தோன்றும்.

கட்சி வளர்ச்சி, கொள்கைகளைப் பரப்புவதற்கு எல்லா வழிமுறைகளையும் பயன்படுத்த வேண்டுமென்பதில் குறியாக இருப்பார்.

1944-ல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஐந்து லட்சம் நிதி வசூலுக்கு வேண்டுகோள் விட்டது. தமிழ் நாட்டிலும் அதற்குரிய பங்கை வசூலிக்கத் திட்டமிடப்பட்டது.

தொழிலாளர்களிடமும், பொது மக்களிடமும்தானே வசூலிக்க முடியும். வசதி படைத்தவர்கள் கம்யூனிஸ்ட் கட்சிக்கு நிதி கொடுப்பார்களா?

கொள்கையையும் எடுத்துச் சொல்ல வேண்டும். அதிகமாக மக்களைத் திரட்ட வேண்டும். ‘நாடகம்’ நடத்தி வசூலிக்க நினைத்தார்கள்.

“தமிழ் நாடு புதுமைக் கலா மண்டபம்” என்ற பெயரில் நாடகக் குழு அமைக்கப்பட்டது.

ஜீவாவின் புரட்சிப் பாடல்கள், பாரதி பாடல்கள், வங்கப் பஞ்சத்தைச் சித்திரிக்கும் புல்லரிக்கும் பாடல்கள் ஆகியவற்றை இசையமைத்துப் புரட்சி இசை மேதை

இராமதாஸ் பாடுவார். நாடகக் குழு நடத்திக்காட்டிய நாடகங்களில் கம்யூனிஸ்ட் கட்சி ஊழியர்கள், தலைவர்கள் அனைவரும் நடித்தார்கள்.

நாடகம் நடத்தப்படும் ஊர்களில் உள்ள தோழர்களில் சிலரும் இணைந்து கொள்வார்கள்.

சென்னை, கோவை, திருப்பூர், மதுரை, தூத்துக்குடி போன்ற நகர்களில் நாடகம் நடத்தப்பட்டது. "கந்தன் காட்டும் வழி" நாடகத்தின் தலைப்பு.

நாடகத்துக்குப் பொது வசூல் உண்டு. நுழை வாயிலில் டிக்கட் வசூலும் நடைபெற்றது. ஆயிரக்கணக்கில் நல்ல வசூலும் நடந்தது. மன்னார்குடி விவசாயிகள் சங்க மாநாட்டில் 'சுப்பனார்' நாடகம் நடந்தது. பி.வி.கிரி, ராமகிருஷ்ணன், கே.பி. ஜானகி மற்றும் பலர் நடித்தார்கள்.

சில நிகழ்ச்சிகளில் சீனிவாசராவ் போலீஸ் அதிகாரியாக நடித்திருக்கிறார்.

சென்னை புனிதமேரி அரங்கில் நாடகம் நடைபெற்றது. இரவு 7 மணிக்குத் தொடங்கியது. 11 மணிக்குத்தான் முடிந்தது.

நகரின் பல பகுதிகளிலிருந்தும் நாடகத்துக்கு வந்திருந்தார்கள். இறுதிவரை இருந்து ரசித்தார்கள்.

"வங்கம் பாரடா தோழா—
வங்கம் பாரடா

துங்கவன நாடு-இன்று
துடித்துச் சாகுதே" —

என்ற பாடலைத் தோழர் இராமதாஸ் பாடியதும் பலதடவை "ஒன்ஸ்மோர்" விழுந்ததாம்.

சங்கீத மேதையும், இசைக் கல்லூரிப் பேராசிரியருமான திரு. சாம்ப மூர்த்தி அவர்கள் "இராமதாஸின் பாட்டை எந்தத் தராசில் வைத்துப் பார்த்தாலும், அது ஒன்னாந்தரமானது" என்று பாராட்டியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் முற்போக்கு எழுத்தாளர்களை உருவாக்கிய மூலவர்களில் ஒருவரான—திரு.வ.ரா. (வ.ராமசாமி ஐயங்கார்) நாடகத்தைப் பார்த்தார்.

"பழைய நியதிகளை எள்ளளவும் பொருள்படுத்தாது, பழைய ரூபங்களில் புதுக் கருத்துக்களை நுழைத்து நீங்கள் அளித்த கலை விருந்து எதிர்பாராத அளவுக்கு வெற்றி" என்று புகழ்ந்துரைத்தார்.

முப்பதாண்டுகளுக்கு முன்பு, பட்டி தொட்டி எங்கும் நாடகங்களின் மூலமாக முற்போக்கான கருத்துக்களைத் "தமிழ்நாடு புதுமைக் கலா மண்டபம்" பரப்பி வந்தது.

புதுமைக் கலா மண்டபத்தின் நாடகங்கள் புத்தக ரூபத்திலும் கிடைக்குமென்று "ஜனசக்தி"யில் விளம்பரம் செய்யப்பட்டது.

"தமிழ் நாடு புதுமைக் கலா மண்டபத்தின்" பொறுப்பாளர் யார் என்று நினைக்கிறீர்கள்! இயக்குநர்: தோழர்: "பி.எஸ்.ராவ்".

புரட்சிக் கருத்துக்களைப் பரப்புவதே அவர் நோக்கம். அதற்காகப் பல்வேறு அமைப்புகளை நிறுவி, நிர்வகிப்பதில்

திறமையானவர் என்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டாகும்!

நியூ செஞ்சுரி புத்தக நிலையத்தை அபிவிருத்தி செய்வதிலும் ஆர்வம் காட்டினார். 1957-ல் நிர்வாகப் பொறுப்பிலிருந்தார்.

20

காதல் திருமணம்

நான்கு ஆண்டுகள் தலைமறைவு. அவர் தலைக்கும் விலை வைத்திருந்தபோதும், தலைமறைவாகத் தப்பித்து வந்தார். கட்சியையும் வழி நடத்தி வந்தார்.

1952– போருக்குப் பின் சிறிது அமைதியைப்போல், அடக்குமுறை தளர்த்தப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சி தடை நீக்கப்பட்டு, பகிரங்கமாகச் செயலாற்றத் துவங்கியது.

தோழர் பி.எஸ்.ஆர். சேலம் மாவட்டத்தில் ஆரம்ப காலம் முதல் நெருங்கிய அரசியல் தொடர்பு இருந்தது.

துவக்கப்பள்ளி ஆசிரியையைக் காதலித்தார்.

உயர்குடிப் பிறப்பு: வைதீகக் குடும்பம், கர்நாடகம்– தமிழ் என்ற மாறுபட்ட நிலைகள் எதுவும் இவர்கள் காதலுக்குத் தடையாக இருக்கவில்லை.

கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆதரவான கருத்துடைய ஆசிரியை நாச்சியாரம்மாளை-சீனிவாசராவ் திருமணம் செய்து கொண்டார்.

1952-ல் திருமணம் நிறைவேறியது. சென்னையில் குடியமர்த்தினார்.

மூன்று குழந்தைகள், பிரேமலதா, சுமதி, ராஜசேகர் மூவரும் கல்லூரிகளில் படித்து வருகிறார்கள்.

ஆண்டுதோறும் செப்டம்பர் 30-ல் தோழர் சீனிவாசராவ் நினைவு அஞ்சலி திருத்துறைப்பூண்டியில் நடைபெற்று வருகிறது.

திருமதி நாச்சியாரம்மாளும், செல்லக் குழந்தைகள் மூவரும்- ஆண்டுதோறும் திருத்துறைப்பூண்டிக்கு வந்து, அன்புத் தந்தைக்கு அஞ்சலி மரியாதை செலுத்தி வருகிறார்கள்.

21

பாத யாத்திரை

நடந்து செல்வதென்றால் சீனிவாசராவுக்கு அலாதியான பிரியம். அவரின் உள்ளத்தைப் போலவே நடையும் வேகமாக இருக்கும். புரட்சி ராணுவத் தளபதியாகக் கம்பீரமாக நடப்பார்.

1960-ல் உச்ச வரம்புக் கோரிக்கைகளைக் கிராமங்களெங்கும் பிரச்சாரம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது. அரசின் நில உச்சவரம்பு மசோதாவுக்குத் திருத்தங்களைத் தயாரித்து — "அரசின் நில உச்சவரம்பு தங்கமா? பித்தளையா?" என்ற பிரசுரம் பல்லாயிரக் கணக்கில் விற்பனையாகியது.

நிலச் சீர்திருத்தக் கோரிக்கைகளுக்கு மக்களின் ஆதரவைத் திரட்ட — மதுரையிலிருந்து ஒரு குழுவும், கோவையிலிருந்து ஒரு குழுவும் சென்னைக்குக் கால்நடையாகப் புறப்பட்டது.

கோவைக் குழு சீனிவாசராவ் தலைமையில் புறப்பட்டது. மதுரைக்குழு மணலி தலைமையில் சென்றது.

கோவையிலிருந்து புறப்பட்ட குழுவில் தோழர். பி. சீனிவாசராவ், தலைவர். பங்கேற்ற தோழர்கள்.....

எல். அப்பு

ஜோதி நாத்

கே. கருப்பசாமி

எம். சத்யவேலு

எம். வேலுச்சாமி

ஏ. அய்யாச்சாமி

பழனிச்சாமி

சேலம் என். முத்து

ஐ. பாஷா கான்

கு. சின்னப்ப பாரதி

எச். ஆர். கணேசன்

அர்த்தநாரி

தென்னாற்காடு பத்மநாபன்

சீனிவாசன்

திருச்சி. கே. ஒய். சிதம்பரம்

செங்கற்பட்டு எம். மூக்கன்

சம்பந்தம்

ஆக 18 பேர் பங்கேற்றனர். எல். அப்பு இக்குழுவின் துணைத் தலைவராக இருந்தார். கோவை எல்.ஜி. கீதானந்தன் ஜனசக்தி நிருபராக உடன் சென்றார்.

(ஜனசக்தி 17-8-1960)

தமிழகத்தில் கம்யூனிஸ்ட் இயக்கம்
தோற்றமும் வளர்ச்சியும் -
என். ராமகிருஷ்ணன்.

மதுரையிலிருந்து புறப்பட்ட குழுவில் தோழர் மணலி கந்தசாமி தலைவர். பங்கேற்ற தோழர்கள்....

எஸ். அழகர்சாமி

வி.எம். சுப்ரமணியம்

சி. கோவில்பிள்ளை

என். ராமசுப்பு

என். ஜெயபாண்டியன் (ஏரல்)

ஆர். ராமர்ராஜ் - மதுரை மாவட்டம்

பி. அப்துல் காதர் ,,

எஸ். ராமு ,,

யூ. பி. பால்சாமி ,,

உ.ச. உலகப்பா ,,

திருச்சி வி. நாகு

ஐ. மாயாண்டி பாரதி

தஞ்சை ஏ. கே. சுப்பையா

டி.எஸ். சிவகுருநாதப்பிள்ளை (மதுரை மாவட்டம்)

கே.எஸ். அண்ணங்கார் (சீர்காழி)

வி. ராமசாமி (தஞ்சை)

டி. ஆறுமுகம் (மன்னார்குடி)

எம்.எஸ். கணபதி (தஞ்சை)

தென்னாற்காடு எஸ். நடராஜன்

ஏ. முனுசாமி (துணிசிரமேடு)

கே. சீனிவாசன் முகவை மாவட்டம்

எம். ஆதிமூலம் ”

எஸ். உலகநாதன் ”

எஸ். கிருஷ்ணன் ”

வி. தனுஷ்கோடி - தஞ்சை

சீனிவாசராவுக்கு ஆஸ்த்மா நோய் உண்டு. நீண்ட பாத யாத்திரையில் கலந்து கொள்ள வேண்டாமென்று தமிழ்நாடு விவசாயிகள் சங்க நிர்வாகக் குழுவில் வேண்டினோம். தமிழகம் தழுவிய பேரியக்கத்தில் தானும் கலந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

300 மைல்களுக்கு மேல் பாத யாத்திரை இளைஞர்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாகச் செயல்பட்டார். அரைக்கால் சட்டையும், தலையில் தொப்பியும் மாட்டிக் கொண்டார். ராணுவ நடையில் செல்வார்.

நீண்ட நெடும் பயணத்தில் களைப்பு தட்டாமல் இருக்க விதிமுறைகளைத் தெளிவாக வகுத்துக் கொடுத்தார். எல்லா வேலைகளும் முறையாக நடக்கத் திட்டமிட்டார். எக்காரணம் கொண்டும், பாத யாத்திரை தடைப்பட்டு விடாமலிருக்க-முதல் உதவி மருந்துகள் வரை பட்டியல் போட்டுத் தயாரித்து வைத்துக் கொள்ளக் கட்டளையிட்டார்.

பாத யாத்திரைக் குழுக்கள் வழி நெடுக இரண்டரை லட்சம் மக்களை அணுகிக் கையெழுத்துக்களை வாங்கினார்கள்.

தமிழ்நாட்டில் நடைபெற்ற நீண்ட பாத யாத்திரைக் கிளர்ச்சி இதுவேயாகும். இதற்கு முன்பும் நடந்ததில்லை. பின்பும் இதுவரை நடக்கவில்லை.

22

நில உச்சவரம்பு—மறியல் கிளர்ச்சி

1961 செப்டம்பர் 14.

உச்ச வரம்பு மசோதாவைத் திருத்த வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய கிளர்ச்சியைத் தமிழ்நாடு அரசு புறக்கணித்தது.

அரசைப் பணியவைக்கப் பாத யாத்திரை மட்டும் போதவில்லை.

தமிழ் நாடெங்கும் அரசு அலுவலகங்கள் முன்பு மறியல் நடந்தது. பதினாறாயிரம் பேர் சிறை சென்றார்கள்.

பல்லாயிரக்கணக்கில் மறியல் செய்து சிறை சென்ற சம்பவம் – அரசைச் சிறிது அசைய வைத்தது.

தமிழ்நாட்டில் பதினாறாயிரம்பேர் மறியலில் சிறை சென்றது – தேசியப் போராட்டத்தில்கூட நடந்ததில்லை.

இந்தக் கிளர்ச்சியில், சீனிவாசராவ், சிறை செல்லாமல், வெளியிலிருந்து வழி நடத்திச் செல்லும் தளபதியாகப் பணியாற்றினார்.

தொண்டர்களுக்குச் சிரமமில்லாமல், அலைக்கழிக்காமல், கைது செய்யப்பட, அதிகாரிகளுக்கு அமைதியான தொல்லைகளை எவ்வாறு கொடுக்க வேண்டுமென்று

ஆலோசனைகளை ஆங்கங்கே தொண்டர்களுக்குச் சொன்னார்.

எல்லா மாவட்டங்களுக்கும் இராப்பகலாகப் பயணம் செய்தார். கிடைத்த வாகனங்களில்—பஸ், ரயில், நடை—பிரயாணம் செய்தார். முற்பகலில் ஓர் இடத்தில் மறியல் தொண்டர்களைப் பார்த்து வாழ்த்து கூறிச் செல்வார். பிற்பகலில் வேறு இடத்திற்குச் சென்று சந்திப்பார்.

தென் கோடியிலிருக்கும் நெல்லை மாவட்டத்துக்கு வந்தார்.

நெல்லை , ஸ்ரீவைகுண்டம், மறியல் மையங்களில் தொண்டர்களைச் சந்தித்தார். சங்கரன்கோவிலுக்குச் சென்றோம். சங்கரன் கோவில் வட்டச்செயலாளரும் நெல்லை மாவட்டத் தலைவர்களில் ஒருவரான சிவகிரி செல்லையாவும் உடன் வந்திருந்தார்.

சங்கரன்கோவிலில் கட்சிக் கிளை கிடையாது. சிவகிரித் தொண்டர்கள் ஐந்து நாட்களாகத் தாலுகா அலுவலகத்தின் முன்பு மறியல் நடத்தி வந்தார்கள். வில்லிசைக் கலைஞர் கார்க்கி மற்றும் தோழர்கள் அனைவரும் இளைஞர்கள்.

மறியல் தொண்டர்களைக் கைது செய்வதற்கு மாறாக, காவல் துறையினர் தூக்கித் தூக்கி எறிவதைக் கண்டோம். தொண்டர்களின் மறியலைப் பார்த்து ஆதரவு தெரிவிக்கவும் மக்கள் யாருமில்லை.

தோழர். சீனிவாசராவ் இக் கொடுமையைக் கண்டார். கொதித்தார், கர்ஜித்தார். போலீஸ் அதிகாரியைப் பற்றி எல்லா விவரங்களையும் கேட்டறிந்தார். சங்கரன்கோவில் நகருக்கு

வரும்போது வெறும் கழுத்தோடு, தாலிச் சங்கிலி மட்டும் போட்டு வந்தவள், கழுத்தில் தங்க வடமாகப் போட்டிருந்த மர்மத்தை அம்பலப்படுத்தச் சொன்னார். போலீஸ் அதிகாரியின் லஞ்ச அரிப்பையும் கூட்டம் போட்டுப் பேசச் சொன்னார். தட்டிகளில் எழுதி மக்கள் கவனத்துக்குக் கொண்டுவரச் செய்தார்.

அவர் கைப்படக் கண்டனச் செய்தி எழுதினார். அதுவே கடைசி கண்டன அறிக்கை என்று நினைக்கிறேன். அந்தை அப்படியே புகைப்படம் எடுத்து பிரேம் செய்து, நெல்லை மாவட்டக் கட்சி அலுவலகத்தில் மாட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தலைவர் பி. சீனிவாசராவ் பத்திரிகைகளுக்கு வெளியிட்ட அறிக்கை:-

திருநெல்வேலி மாவட்டத்தில் சுற்றுப்பயணத்தின் போது நான் இன்று சங்கரன் கோவிலுக்குச் சென்றேன். தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்த 21 தொண்டர்கள் தாலுகா அலுவலகத்திற்கு முன்பு மறியல் செய்து கொண்டிருந்தார்கள். அந்த மறியல் முற்றிலும் அமைதியான முறையில் நடைபெற்றது எனினும் சில தொண்டர்கள் மிகவும் மோசமான முறையில் தாக்கப்பட்டனர். அதில் ஒரு தொண்டர் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்தார். தொண்டர்கள் தரையில் இழுக்கப்பட்டுச் சாக்கடைக்குள் தள்ளப்பட்டனர் என்று என்னிடம் கூறினார்கள். சப்-இன்ஸ்பெக்டர் சுருளிவேலும் ஒரு தலைமைக் காவலரும் தொண்டர்களைக் கெட்ட வார்த்தைகளைச்

சொல்லித் திட்டியதுடன் அடிக்கவும் செய்ததாகப் பொது மக்கள் என்னிடம் கூறினார்கள்.

பிரிட்டிஷ் ஆட்சியின் போது காங்கிரஸ் தொண்டர்கள் இப்படிக் காட்டுமிராண்டித்தனமான முறையில் தாக்கப்படுவதை நான் பார்த்திருக்கிறேன். இப்பொழுது காங்கிரஸ் ஆட்சியில் காவல்துறையினர் அதே பாணியைக் கடைப்பிடிக்கிறார்கள்.

நெல்லை மாவட்டத்தில் ஐந்து இடங்களில் மறியல் நடைபெற்றாலும் சங்கரன் கோவிலில்தான் சப்-இன்ஸ்பெக்டர் இப்படிக் காட்டுமிராண்டித்தனமாக நடந்துள்ளார்.

உயர்நிலை அதிகாரிகள் உடனே தலையிட்டு அமைதியான முறையில் மறியல் செய்கின்ற தொண்டர்களை இப்படிக் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குவதற்கு முடிவு கட்ட வேண்டும்.

(ஒ-ம்) பி. சீனிவாசராவ்
நாள்: 21-9-1961.

நான்குநேரிக்குச் சென்றோம். அவர் 1946-47 தலைமறைவாக இருக்கும்போது ஒரு வாரம் கிராமங்களில் தங்கியிருந்தார். மற்றக் காலங்களிலும், போராட்டங்களின் போது, நேரடியாக வந்து வழிகாட்டியிருக்கிறார். ஆதலால் சீனிவாசராவைத் தெரிந்த வயதானவர்களெல்லாம் திரண்டு வந்துவிட்டனர்.

மறியல் தொண்டர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

சிறிது நேரத்தில் "ஆஸ்த்மா" தொல்லை அதிகரித்தது. இழுப்பும், எளைப்பும் வந்தது. உயிர்வாதை செய்தது. ஆவேசமான தலைவரை-நோய் அலக்கழிப்பதைக்கண்டு திகைப்படைந்தோம். டாக்டரை அழைத்துச் சிகிச்சை அளித்தோம். ஒய்வெடுக்கச் செய்தோம்.

மூன்று மணி நேர ஓய்வுக்குப் பிறகு, காத்திருந்த விவசாயிகள் கூட்டத்தில் பேசினார்.

அன்றுதான் அவர் ஆசனத்தில் அமர்ந்து பேச இசைந்தார். அமைதியோடும், ஆழமான கருத்துச் செறிவோடும் பேசினார். புரட்சி அறிவுரையாக இருந்தது.

தலைவரின் பேச்சைக் கேட்ட விவசாயிகள் அனைவரும் கண்ணீர் உகுத்தார்கள். மாலைகள் அணிவித்தார்கள். நேரில், ஆடைகளைப் போர்த்தித் தங்கள் தலைவருக்கு மரியாதை செலுத்தினார்கள்.

நெல்லை புறப்பட்டோம். துணியைத் தானே துவைக்க வேண்டுமென்று வலியுறுத்தினார். கண்டிப்பாக மறுத்து விட்டோம். துவைத்துக் கொடுத்தேன். அதுவும் அவருக்குப் பிடிக்கவில்லை.

தொண்டனுக்கு உரிய வேலைகளைக் கெடுக்கக் கூடாது. சொந்த வேலைகளைப் பிறர் செய்ய விடக்கூடாது. தோழர். சீனிவாசராவ் கடைசி வரை இக்கொள்கையைக் கையாண்டு வந்தார்.

அன்றிரவு தஞ்சாவூருக்கு வண்டி ஏற வேண்டும். முன்னேரத்தில் நெல்லை ரயில் நிலையம் போய்ச் சேர்ந்தோம்.

முழுநேர ஊழியர்களின் வாழ்க்கைகளைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். "அவனுக்கு எத்தனை குழந்தைகள்" கட்சி கொடுக்கும் அலவன்ஸ் எவ்வளவு? எவ்வாறு வேலை இருக்கிறது?" என்றெல்லாம் கேள்வி மேல் கேள்வி கேட்டுத் தெரிந்து கொண்டார். முழு நேர ஊழியர்களுக்கு ஏதாவது வழி செய்ய வேண்டுமென்று நினைப்பதாகக் கூறினார்.

தோழர். ப. மாணிக்கமும் வந்து சேர்ந்தார். இருவரும் சீனிவாசராவை முதல் வகுப்பில் பிரயாணம் செய்ய வேண்டினோம்; வற்புறுத்தினோம்.

"முதல் வகுப்புக்குச் செலவாகும். உயரே ஏதாவது துண்டு விரித்து விடு" என்று அழுத்தமாகக் கட்டளையிட்டார்.

மன வேதனையோடுதான் இசைந்தோம். துண்டை விரித்தேன். "ஏறிப் படுங்கள்" என்றேன். "ரயில் போகட்டும்" என்று கூறினார்.

இவ்வளவு உடல் நோவோடு பயணம் செய்கிறாரே என்ற கவலையோடுதான், மாவட்டக் கட்சி அலுவலகத்துக்குத் திரும்பினோம்.

ரயிலில் அனுப்பி வைத்த நினைவு இன்னும் பசுமையாகவே இருக்கிறது.

சீனிவாசராவுக்கு இதுவே கடைசி ரயில் பயணமாக அமைந்துவிட்டது.

தலைவனின் கடுமையான குரலும், கனிந்த உள்ளமும் என்றென்றும் நீங்காத நினைவாகவே இருந்து வருகிறது.

தஞ்சாவூர் அலுவலகத்திற்குப் போய்ச் சேர்ந்தார். தமிழ்நாடு அரசும் நில உச்சவரம்பு மசோதாவில் சில

திருத்தங்களைச் செய்தது. இத்துடன் போராட்டத்தை நிறுத்துவதே சரியாகும் என்று முடிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் என்ற முறையில் தோழர். சீனிவாசராவ் – இரு வாரமாக நடந்து வந்த மறியல் போராட்டம் நிறுத்தப்பட்டதாக அறிவித்தார்.

போர்த் தளபதி உடன்படிக்கை எழுதி ஓய்வு கொள்வதைப்போல, மறியல் நிறுத்த அறிவிப்பை எழுதிய மை உலருமுன்பே, உழவர்படைத் தளபதி பி.எஸ்.ஆர். உடல் நோவுற்றது. தஞ்சை மாட்டு மேஸ்திரி சந்தில் இருந்த மாவட்டக் கட்சி அலுவலகம். 1961 செப்டம்பர் 29-ந்தேதி இரவு "மார்பு வலி, மூச்சு திணறுகிறது" என்றார். தோழர். காத்தமுத்து அருகிலிருந்தார். ஓடோடியும் சென்று டாக்டரை அழைத்து வந்தார். சிகிச்சை செய்யப்பட்டது. சிறிது குணம் தெரிந்தது. இரவு பின்னேரத்தில் போர் வீரன் பி.எஸ்.ஆரின் மூச்சு அடங்கியது.

தஞ்சைத் தரணியே கண்ணீர்விட்டுக் கதறியது. உழைக்கும் விவசாயிகள், தாழ்த்தப்பட்ட மக்கள், தாய்மார்கள் அனைவரும் லட்சம் லட்சமாகத் திருத்துறைப் பூண்டியில் திரண்டனர்.

தங்கள் குடும்பத்தில் ஒருவனாகக் கருதி வந்த தலைவன்; அடிமைச் சங்கிலியை அறுத்தெறிந்த அண்ணல்!

வாழ்நாளெல்லாம் விவசாயிகளுக்காகவே ஓடி ஆடி அலைந்து திரிந்த புரட்சிக் கொழுந்து அணைந்துவிட்டது.

திருத்துறைப்பூண்டியில் உடல் அடக்கம் செய்யப்பட்டது. உருகிடும் நேரத்திலும் ஒளி தரும் மெழுகுத் திரியாக – தலைவர் பி.எஸ்.ஆர் வாழ்ந்தார்!

எங்கிருந்தோ வந்தான்! தமிழக ஏழை உழவர்களின் வாழ்வுக்கு வழிகாட்டினான்.

“சங்கம்” என்ற சொல்லைப் பட்டி தொட்டி எங்கும் பரவச் செய்தான்.

இருள் சூழ்ந்த அடிமை வாழ்வுக்கு விடிவு காண– ஒளிவிளக்காகத் திகழ்ந்தான்!

அமரர் சீனிவாசராவின் தியாக ஜோதியில் – விவசாயத் தொழிலாளர்களையும், உழைக்கும் விவசாயிகள் அனைவரையும் ஒன்று திரட்டுவோம்!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியே சீனிவாசராவின் உயிர் மூச்சு! தமிழகத்தில் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கியவர்களில் ஒருவர்! கம்யூனிஸ்ட் கட்சியின் ஐம்பதாவது ஆண்டில்-பொன் விழாவில் அவர் கண்ட சங்க அமைப்பைப் பட்டி தொட்டி எங்கும் பரப்புவதே அமரர் சீனிவாசராவுக்கு நாம் எழுப்பும் அழியாத நினைவுச் சின்னமாகும்!

பி.எஸ்.ஆர். – எங்கள் தோழரே! தலைவரே!

கம்யூனிஸ்ட் கட்சிக்கும், விவசாய இயக்கத்துக்கும் பேரிழப்பை இந்தச் சாவு தந்துள்ளதாயினும், பி.எஸ்.ஆரின் வாழ்வும், அவர் நினைப்பும் தமிழ் மக்களின் உணர்வு

பெருகப் பெருக ஒளிவிளக்காய் விளங்கி, அவர்களுடைய கனவுகளை நனவாக்கும் என்பது திண்ணம்.

கட்சி வேற்றுமை, கருத்து வேற்றுமைகளைத் தாண்டி தமிழகம் பி.எஸ்.ஆருக்கு கடமைப்பட்டுள்ளது என்பதை நிதான அறிவுடன் ஆனால் உணர்ச்சிப் பெருக்குடன், கண்ணீர்விட்டுத் தமிழ்ப் பெருமக்களுக்குக் குறிப்பிட்டுக்கூற விரும்புகிறேன்.

கம்யூனிஸ்ட் தோழர்கள். விவசாய சங்கத் தோழர்களுமாகிய நாம்—

"பிஎஸ்.ஆர். – எங்கள் தோழரே! எங்கள் தலைவரே! உங்கள் ஆணை! செங்கொடி ஆணை! நீங்கள் விட்டுச்சென்ற பணியை மேன்மேலும் முன்னேறி நிறைவேற்றுவோம் என்று சபதம் செய்வோம்.

ஜீவா,

"ஜனசக்தி" 11-10-1961

படிக்க வேண்டிய நல்ல நூல்கள்

- ஜீவாவின் சிந்தனைகள் : *தொகுப்பு :* பொன்னீலன்
- பாசிசம் குறித்த விரிவுரைகள் : டோக்ளியாட்டி *தமிழாக்கம்:* மாஜினி ரங்கசாமி
- ஐக்கிய முன்னணித் தந்திரம் : *தமிழாக்கம்* ஏ.சீனிவாசன்
- மார்க்ஸிய மெய்ஞ்ஞானம் : *தமிழாக்கம்* ஆர்.கே.கண்ணன்
- ஜீவ காவியம் : கருமலைப் பழம் நீ
- மார்க்சியம் எதிர்காலம் : ஆர். பார்த்தசாரதி
- மார்க்சிசமும் மதமும் : எஸ்.தோதாத்ரி
- உலகைக் குலுக்கிய இரு நண்பர்கள் : அறந்தை நாராயணன்
- சமதர்மச் சிந்தனைகள் : எல்.ஜி.கீதானந்தன்
- கான்பூர் முதல் திருவனந்தபுரம் வரை : எம்.ஏ. பழனியப்பன்
- சோவியத் நட்புறவுப் பயணம் : செ.அரங்கநாயகம்
- கோர்ப்பசேவ் புரட்சியும் தாக்கமும் : டி. ஞானையா